சிவமயம்

# குமரகுருபரன்

மலர் 26] புரட்டாசி மீ 1-ம் ௳ (17-9-75) [இதழ் 9



தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ. 5-

த. 3121

## ஆசிரியர் குழு

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால், திருப்பனந்தாள்,

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A..
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4, திரு. டி. எச். விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A. L. T. ஓய்வுபெற்ற அசிஸ்டெண்டு கமிஷனர், சென்னை-86

5. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம். மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை,
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

## உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருவுந்தியார்—உரை விளக்கம் | 433 |
| 2. | அருள்மொழி அமுது | 437 |
| 3. | உயர்மானுடம்-1 எண்ணங்கள் | 440 |
| 4. | புதுடெல்லியில் ஆண்டாள் திருக்கல்யாண விழா | 444 |
| 5. | அலங்கார நாயகன் (15) | 445 |
| 6. | சிவலிங்கப் பெருமான் | 449 |
| 7. | திருமுருகாற்றுப்படை உரை விளக்கம் | 457 |
| 8. | ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம் | 462 |
| 9. | கலையும்-மனித மனமும் | 465 |
| 10. | அவா அறுத்தல் | 473 |
| 11. | காலந்தோறும் பழமொழி | 477 |
| 12. | மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள் | 479 |

T-UN-450

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# அறிவிப்பு

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

# கந்தர்கலி வெண்பா

சகல கலாவல்லி மாலை

**தெளிவுரையுடன் சிறந்த பதிப்பு**

நெடுநாளாக எதிர்பார்த்திருந்த திருமுறைக்கலைஞர்

திருச்சி வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவாரவர்களின்

பதவுரை - பொழிப்புரை – விளக்கம் – தெளிவுரை

ஒப்புமைபகுதி ஆராய்ச்சி குறிப்புகளுடனும்

சிங்கவாகனரூபடராயிருக்கும் குமரகுருபர

சுவாமிகள் படத்துடனும் கூடிய

நான்காம் பதிப்பு

ராக்ஷச ஆண்டு ஆடிச் சுவாதி நினைவு வெளியீடு

எல்லோருக்கும் எளிதில் விளங்கக்கூடியது

**பிரதி ஒன்றின் விலை ரூ. 1–50.**

தபால் கட்டணம் தனி. ஒரு பிரதியின் புத்தக அஞ்சல் கட்டணம் 0-20.

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 26 | இராக்ஷஸ ஞு புரட்டாசி மீ 1௳ [17-9-75] | இதழ் 9

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்

அருளிய

# திருவுந்தியார்—உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை

(மலர்-26 388ம்-பக்கத் தொடர்ச்சி)

சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்ததென் றுந்தீபற
ஒவ்வாத தொவவாதென் றுந்தீபற. 25

சீவபோதத்துக்கு அடிப்படையாகவுள்ள சித்த தத்துவமும், தீமையை உண்டு பண்ணுவனவாகிய அந்தக் கரணங்களும் சிவத்துடன் பொருந்தும்படி நிற்பவர்களே. கன்மங்கள் பக்குவமடைந்து துலையொத்து நிற்பவர்களாவார்கள். அங்ஙனம் நில்லாதவர்கள் இருவினையொப்பு இல்லாதவர்கள்.

அசுத்த மாயையிலிருந்து காலம் நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய தத்துவங்கள் தோன்றிய பின்னர், அத்தத்துவங்களுள் ஒன்றாகிய கலையினின்றும் சாத்துவிக, இராசத, தாமதங்களாகிய முக்குணங்களையும் அடக்கிக் கொண்டிருக்கின்ற மூலப் பிரகிருதி தோன்றும், அதிலிருந்து குணங்களும் அறியாமையும் வெளிப்படும். குணதத்துவத்திற்குக் காரணமெனச் சித்திக்கப்பட்ட மூலப்பிரகிருதியைச் ''சித்தம்'' என்று சொல்லுவதுண்டு. இந்தச் சித்தமும், மனத்தின் பின்னதாய் அதன்கண் அடங்கும் சித்தமும் வேறு வேறு என்பது உணரத் தக்கதாகும். மனத்தின் பின்னதாகிய சித்தம், சந்தேகத்தை உண்டாக்குகின்ற மனத்தையன்றி வேறாகாதது. இதனை ''சிந்தை நினைவையம் வந்து தரும் மனமொழிய வகுப்பொணாதே'' என்னும் சிவப்பிரகாசத்தால் அறியலாம்.

அறியாமையாகிய சீவபோதத்துக்கு இடமாயிருப்பது மூலப்பிரகிருதியாகிய சித்த தத்துவம், அதிலிருந்து தோன்றும் புத்திதத்துவம், உயிர்கள் செய்யும் புண்ணிய பாவங்களைப் பொருந்தி, அவற்றிற்கீடாக வந்தபொருள்களை நிச்சயித்து, அவற்றைச் சுகம், துக்கம். மோகமென வேறுபடுத்தி அறிவதற்கு விடயமாய் இருக்கும். புத்திதத்துவத்திலிருந்து தோன்றிய அகங்கார தத்துவம், என்னையொப்பார் எவருமில்லை என அகந்தைப் படுவதற்குக் காரணமாய், உடம்பை ''யான்'' என்றும் பிற பொருள்களை ''எனது'' என்றும் பற்றி நின்று உயிருடன் வேற்றுமையின்றி இருக்கும். இதுவேயன்றி மூலமாகிய குணதத்துவத்தின் வேற்றுமை பற்றித் தாமத குணத்தின் தோற்றமாகிய பூதாதி, இராசத குணத்தின் தோற்றமாகிய வைகரி. சத்துவ குணத்தின் தோற்றமாகிய தைசதம் என முத்திறப்பட்டும் இருக்கும். இம்மூவகை அகங்காரத்துள்

தைசத அகங்காரத்திலிருந்து மனம் தோன்றிச் சித்த ரூபமாய் நின்று, எதிர்ப்பட்ட பொருளின் உண்மையை அறியாமல் பிண்டமாக அறிந்து சிந்திக்கும். சிந்தித்த பின்னர் அதுவோ இதுவோ என ஐயப்பட்டு நிற்கும். மனமொன்றே ஐயுற்று நிற்றலால் மனமென்றும், சிந்தித்து நிற்றலால் சித்தமென்றும் இருவகைப்படுவது. அகங்கார தத்துவத்திலிருந்து ஞானேந் திரியங்கள் கன்மேந்திரியங்கள், தன் மாத்திரைகள். பூதங்கள் ஆகிய இருபது தத்துவங்களும் தோன்றி உயிர்களின் அறிவு தொழில்களை விளக்கிக் கொண்டிருக்கின்றன.

பொருளை அறிபவர்களுக்கு ஞானேந்திரிய கன்மேந்திரி யங்கள் புறத்தே தோன்றித் தொழிற்படும் கருவிகளாயுள்ளன இந்திரியங்களால் அறியப்பட்ட பொருள்களை உடம்பின் அகத்தே நின்று பகுத்தறியும் உட்கருவிகளாக, மனம் முதலிய அந்தக் கரணங்கள் உள்ளன. இங்ஙனம் அமைந்த தத்துவக் கூட்டங்களால், உயிருக்கு வருகின்ற ஊதியம் கட்டுப்பாடே யாகும். "மாயான்தன் வயிற்றிவற்றால் தொடக்குண்டுவாழும் ஆன்மா" என்பது சிவஞான சித்தியார்.

கருவி கரணங்களின் வாயிலாக உலகத்தைத் தொட்டுக் கொண்டிருக்கின்ற உயிர், அவ்வுலகமயமாகவே இருப்பதைப் போல அவற்றின் வாயிலாகச் சிவபெருமானைத் தொட்டுக் கொண்டி ருக்கின்ற உயிர், சிவமயமாகவே இருக்கும். சீவன் முத்தனுகிய சிவஞானி, பிராரத்துவ உடலோடு கூடியிருக்கும் வரை புலனறிவு நீங்காமையால். நிட்டையிற் பொருந்திய வேளையிலும் பேதப்படுத்திப் பொறிவழியிற் செலுத்தி ஐம் புலன்களும் அவனை அலைத்துவிட ஆயுத்தமாய் இருக்கும். என்றாலும் சிவஞானியினது உள்ளத்தில் சிவம் தோன்றித் தீ இரும்பைச் செய்வது போல், பந்தனையை அறுத்துத் தாணுக்கித் தன்னுருவப் பரப்பை எல்லாம் தொடுபோந்து பதித்திருத்தலால், தனது பசு கரணங்களாற் செய்யப்படும் எல்லாச் செயல்களையும் சிவச்செயல்களாகவே கருதுவான். அப்போது அவனது பசு கரணங்களெல்லாம் சிவகரணங்களா கப் பிரகாசிக்கும். ஆற்றுநீர், கடல் நீருடன் ஒன்றாய்க் கலந்த

பின்பு மீண்டும் ஆற்றில் நெடுந்தூரம் சென்று எதிர்த்தாலும் கடல்நீரில் கலந்ததனுல் வந்த உப்புமயமாகவே யிருத்தல் வெளிப்படையல்லவா? இதனை உட்கொண்டே "கலந்தபின் பிரிவதில்லை" என்று அப்பாடிகள் அருளிச் செய்கின்றூர்கள்.

புண்ணிய பாவ ஈட்டத்திற்குக் காரணமாயிருக்கிற சித்தம், அந்தக் கரணம் முதலிய தத்துவங்கள், பசுபோத நிலையில் தொழிற் படுகிறவரை இருவினையொப்பு நிகழுவதற்கு இடமேயில்லை 'யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும், இக்கோணை ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்துத்தான் செவ்வே நின்றிட அத் தத்துவன்தான் நேரே, தனையளித்து முன் நிற்கும் வினை ஒழித்திட்டோடும்" என்பது சிவஞான சித்தியார் பசு கரணங்கள் சிவகரணங்களாகப் பெற்றவர்களன்றி. அங்ஙனமில்லாதவர்கள் அதனைப் பெற மாட்டார்கள். அதனுல் மலபரிபாகம், சத்திநிபாதம், சிவப்பேறு ஆகியவையும் அவர்களுக்கு வாய்க்க இடமில்லை.

———

(தொடரும்)


## " ஞானசம்பந்தம் "

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6-00 வெளிநாடு ரூ. 10-00

செயலாளர், " ஞானசம்பந்தம்" அச்சகம் "

தருமபுரம், மாயூரம் P O.

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 24. சடாமகுடமே மகுடம்

பெரிய புராணத்தில் இருநாயனர்களே துறவிகள். ஒருவர் அப்பர். மற்றொருவர் மூர்த்திநாயனர். கன்னிநாடு என்ற பாண்டிய தேசத்தவர். மதுரை சோமசுந்தரப் பெருமானுக்கு தினமும் சந்தனக் காப்புப் பொருத்திச் சேவை செய்பவர். சந்தனத்தால் இறைவனின் திருமேனி குளிர்ந்தால் உலகமே குளிருமென்பது நம் முன்னோர் கொள்கை.

வடுக தேசத்தரசன் கருவிப் படைகளுடன் வந்து மதுரையை வென்று கைப்பற்றியதுடன் அருக மதத்தைப் பரப்புதற்கு முயற்சித்தான். சிவனடியாரையும் துன்புறுத்த பார்த்தான். தனது திருப்பணியை எவ்வித இடையூறு வந்தாலும் பொறுத்து நன்கு செய்தார். நம் பக்தர்களின் திருப்பணியை எவரால் தடுக்க முடியும்? என்பது குறிப்பு.

அந்தமிலவா மிறை செய்யவும் அன்பனர்தாம்
முந்தைம் முறைமைப்பணி முட்டலர் செய்து வந்தார்
தந்தம் பெருமைக்கு அளவாகிய சார்பில் நிற்கும்
எந்தம் பெருமக்களை யாவர் தடுக்க வல்லார்?

அரசன் நாயனருக்குத் திருப்பணி செய்வதற்கான சந்தனக் கட்டைகள் கிடைக்காது தடுத்தான். "அக்ரமம் செய்யும் இவன் அழிந்து பூதிசாதன வழி நிற்கும் ஒரு புண்ணியன் இந்நாட்டின் அரசை ஏற்கும் காலம் வராதா? என ஏங்கினர் நாயனர்;

புன்மைச் செயல்வல் அமண்குண்டரிற் போது போக்கும்
வன்மைக் கொடும்பாதகன் மாய்ந்திட: வாய்மைவேத
நன்மைத் திருநீற்றுயர் நன்னெறி தாங்கு மேன்மைத்
தன்மைப் புவிமன்னரைச் சார்வதென்று'' என்று சார்வார்,

நாட்டில் நல்லோர் வருந்தக் கூடாது. திருமூல நாயனுர் அருளிச்செய்துள்ள திருமந்திரம் மூவாயிரத்திலே நல்லோர் துன்பப் படக் கூடாது என்ற கருத்தை,

''பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே. —திருமந்திரம்-515

கற்புக்கரசிகளும் ஞானிகளும் மனம் வருந்துமாறு துன்பம் செய்தவர்களின் செல்வமும் உயிரும் ஒரே வருடத்தில் அழிந்துவிடும் எனச் சத்தியம் செய்கின்ருர் ஞானியான திருமூலர். எனவே நல்லோர் வருந்துமாறு எவருமே நடக்கக் கூடாது என்பது குறிப்பு.

ஒரு நாள் நாயனுருக்கு நல்ல சந்தனம் கிடைக்கவில்லை. மட்டமான சந்தனத்தைச் சிவபெருமானுக்கு உபயோகிக்க அவர் விரும்பவில்லை. செஞ்சந்தனம் கிட்டவில்லையென்பதால் தனது கையையே கல்லில் சந்தனம் தேய்ப்பது மாதிரி தேய்த்தார் நாயனுர். தோல் தேய்ந்து, குருதிபெருகி, எலும்பு டைந்து உள்ளிருக்கு வழும்பும் ஒழுகிற்று. ''முத்திவேண்டுமென்று கூடக்கேட்காமல் அன்பின் காரணமாகவே எமக்குச் சேவை செய்த அன்பனே! உனக்குத் துன்பம் செய்தவனின் அரசையெல்லாம் கைக்கொண்டு அரசாட்சி செய்து, சந்தனப் பணியும் செய்து என்பேருலகடைவாயாக!'' என்றது அசரீரி.

''அன்பின் துணிவால் இது செய்திடல், ஐய! உன்பால்
வன்புன் கண்விளைத்தவன் கொண்ட மண் எல்லாங் கொண்டு
முன்பு இன்னல் புகுந்தன முற்றவும் நீத்துக் காத்துப்
பின்புன் பணிசெய்து நம் பேருலகெய்து கென்ன.

அரசை மாத்திரம் ஏற்றுக்கொள் எனக் கூறினுல் நாயனுர் ஒப்புக்கொள்ளமாட்டார் என எண்ணியே இறைவர் **''முன் புன் பணி''** யாகிய சந்தனச் சேவையையும் செய் என்ருர் போலும்! ''அரசை ஏற்க!'' எனக் கூறியது கேட்டு, தமது திருப்பணிக்கு ஏதாவது தடங்கல் நேருமோ? என எண்ணிய நாயனுர் ''சந்தனப் பணியும் தொடர்ந்து செய்க! என்பது

கேட்டு மகிழ்ச்சியடைந்தார். அங்கிலேயில் கல்லில் தேய்த்த அவரது கையிலிருந்து புண்நீங்கி அவரது திருக்கரம் அழகும் திரட்சியும் கொண்டு விளங்கியதுடன் அவரது உடலே புலால் நாற்றம் நீங்கி நறுமணம் வீசி விளங்கியது. அன்றிரவு கொடிய வனுன அவ்வரசன் மாண்டான். அரசியும் பிரமித்தாள். மந்திரிகள் கூடி அரசமரியாதையுடன் மன்னனின் உடலே அடக்கம் செய்தனர். ''அரசனில்லாது நாடு எவ்வாறு நடைபெறும்.'' என ஏங்கின. மந்திரிகள் யானையொன்றைக் கண்ணைக்கட்டி, அது யாரைத் தூக்கி வருகிறதோ, அவரையே அரசனுக்குவதெனத் தீர்மானித்து யானையை விடுத்தனர். கண்ணைக் கட்டாவிட்டால் எவராவது கனி கொடுத்த ஒருவரைத் தெரிந்து தூக்கி வருமென்ற ஐயம்போலும்! தூசியைக்கிளப்பிக்கொண்டு, வந்தயானை. உலகஞ் செய்த புண்ணியத்தால், கோயிலுக்கு வெளியில் நின்ற நாயனுரைத் தூக்கித் தன் பிடரி மீது வைத்துக்கொண்டது.

வேழத்து அரசு அங்கண் விரைந்து நடந்து சென்று
வாழ்வுற்றுலகம் செய் தவத்தினில் வள்ளலாரைச்
சூழ் பொற்சுடர் மாமணி மானிலந் தோய முன்பு
தாழ்வு ற்றெடுத்துப் பிடர்மீது தரித்ததன்றே.

மந்திரிகள் யாவரும் நாயனுரை வணங்கினுர்கள். யானை அவரை அரண்மனைக்கு எடுத்துச் சென்றது. அரியணையில் அவரை அன்பர்கள் அமர்த்தினுர்கள். ''சமணத்தை ஒழித்துச் சைவம் தழைப்பதானுல்தான் இவ்வரசைக் கைக்கொள்ளுவேன்'' என நாயனுர் கூற அனைவரும் அதற்கு இணங்கினுர்கள். மேலும் ''திருநீறே எனக்கு அபிடேகப் பொருளாகவும், ருத்ராக்ஷம் என் அரசிற்கு அடையாளமுமாகவும், எனது சடாமகுடமே கிரீடமாக இருந்தால் உலகம் தாங்குவேன்'' எனக்கூறினுர் மூர்த்தியார்.

வையம் முறைசெய்குவேனுகில் வயங்கு நீறே
செய்யும் அபிடேகமுமாக: செழுங்கலன்கள்
ஐயன் அடையாளமுமாக அணிந்து தாங்கும்
மொய்புன்சடை மாமுடியே முடியாவதென்றுர்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

உயர்மானுடம்—1

# எ ண் ண ங் க ள்

புலவர் திரு. ச. தனுக்கோடி இராமசாமி, பி. ஏ., அவர்கள்

தமிழாசிரியர்,

ஆ. வை. உயர்நிலைப்பள்ளி,

சாத்தூர். 626203.

*"சிறந்த வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ளுவது, முழு வாழ்க்கை எப்படிச் சமய மயமாகிறது என்பதை 'உயர் மானுடம்' என்ற கட்டுரைகளில் முடிந்தளவு விளக்க நினைக்கிறேன்"*

உண்ணுவதிலும் உறங்குவதிலும் இனப் பெருக்கம் செய்வதிலும் பிற உயிரினங்களிலிருந்து மனிதன் வேறுபட்டிருப்பதும் இவற்றை நாகரீகமாக அமைத்துக் கொண்டிருப்பதும் மட்டும் மானுடம் அல்ல. மிருகத்தனத்திலிருந்து மானுடம் வேறுபடுவது எண்ணத்திலேதான் அமைந்திருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஞானிகள் இதை அறிந்

(முன் பக்கத் தொடர்ச்சி)

கல்யாணமான பெண்ணிற்கு எப்படி தாலி அடையாளமோ அவ்வாறே சிவனடியாருக்கு ருத்ராக்ஷம் அடையாளம் என்பது குறிப்பு.

அனைவரும் நாயனர் கூறுவதை ஒப்புக்கொண்டார். தவராஜரான நாயனாரும் அரசரானார். கோயிலுக்கு நடந்து சென்று தரிசித்த பின் யானையிலேறி அரண்மனை திரும்பினார்.

அவரது ஆட்சியில் சமணம் ஒடுங்கிச் சைவம் தழைத்தது. திருநீறு, ருத்ராக்ஷம், சடைமுடி இவற்றுடன் அரசாட்சி செய்ததால் மும்மையால் ஆண்டவர் எனப்பெயர் பெற்றார். அரசுவந்தும் பெண்ணாசையுட்பட எந்த ஆசையுமில்லாது உலகிற்குநன்மை புரிந்து ஆண்டார். சிறிது நாட்களில் இறைவனடி சேர்ந்தார்.

"மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்"

திருச்சிற்றம்பலம்

திருந்தார்கள். இன்றைக்குத் தமிழின் மிகத் தொன்மையான நூலாக உள்ள தொல்காப்பியம் இதை நுட்பமான அறிவுடைய மாந்தர் அறியும்படி எடுத்துச் சொல்லுகிறது. உயர்திணை என்பது மனித உடலையோ மனிதனின் உயிரையோ குறிப்பது அல்ல. உயர்திணை என்பது மனித உடம்பில் உயிர் இருக்க எழும் மானுடமே பிறவெல்லாம் அஃறிணையாகும் என்கிறார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

**''உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை யென்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே''** *(தொல். சொல்-1)*

'மக்கள் என்று குறிப்பிடப்படும் மனிதத் தன்மைதான் உயர்திணை' என்பது தொல்காப்பியர் புதிதாக வகுத்த இலக்கணம் அன்று அது பண்டுதொட்டு தமிழகத்தில் இருந்திருக்கிறது. இதைக் குறிக்கத்தான் ஆசிரியர் 'என்மனார்' என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

''மக்கள் உருவத்தால் மட்டுமன்றி பேரறிவுடையவராகத் திகழ்ந்தாலும் அவர்களுக்கு மனிதத் தன்மை இல்லை என்றால் நான் அவர்களை மனிதர்களாக மதிக்கத் தயாராக இல்லை. அவர்களை மிருகங்களினும் கீழான மரங்களாகவே மதிக்கிறேன்'' என்று அறிவுக் கடலைக் கடைந்த பொய்யில் புலவர் திருவள்ளுவர் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

**''அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்''** *(குறள்-997)*

மனிதப் பண்பு எண்ணங்களில் அடைந்திருக்கிறது. மனித வாழ்வின் இன்பம், துன்பம், நாகரீகம் எல்லாமே மனித எண்ணங்களில்தான் தோய்ந்திருக்கிறது. எண்ணங்கள் கொண்டுதான் மனிதனை உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பிரிக்க வேண்டும். அமெரிக்காவின் காந்தி எனப்போற்றப் படும், நீக்கிரோக்களின் தலைவராய் இருந்து போராடிய அஹிம்ஸா மூர்த்தி பேரறிவாளர் மாவீரர் மார்ட்டின் லூதர் கிங் அவர்கள்– "I have a dream that one day man will be judged not by the colour or by wealth, but by

brain and thoughts'' என்றுகூறியுள்ளார். இதன்பொருள்'' நான் ஒரு கனவு காண்கிறேன். எதிர்காலத்தில் மனிதனை நிறத்தாலும் பணத்தாலும் நிறை போடும் காலம் மாறும்; மனிதனை அவன் அறிவு கொண்டும் எண்ணங்கள் கொண்டும் எடை போடும் காலம் வருமென்று.'

இருபதாம் நூற்றாண்டில் மாவீரர் மார்ட்டின் லூதர்கிங் அவர்களின் இவ்வுரையை பேரறிவுரையாக உலகம் போற்று கிறது. ஆனால் இதே கருத்தை தொல்காப்பியர், கணியன்பூங் குன்றனர், திருமூலர், திருவள்ளுவர், ஔவையார் போன்ற பண்பட்ட தமிழர்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே இவ் வுலகிற்கு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

மனித எண்ணங்களில்தான் மனித வாழ்க்கை பரிணமிக் கிறது. நெஞ்சையள்ளும் காவியங்கள். கண்ணுக்கு விருந்த ளிக்கும் ஓவியங்கள், பிரமையூட்டும் எழில்மிகு கட்டிடங்கள் இன்னும் பிற கலைகளும், நாளும் வளரும் அறிவியலும்,கண்டு பிடிப்புகளும், பல்வேறு ஆக்கங்களும் மனித எண்ணங்கள் படைத்த சாதனைகளே?

இதயக்கோளாறு, மூளைக்கோளாறு, இரத்தக்கொதிப்பு, ஆஸ்த்துமா, மூலநோய், ஹிஸ்ட்ரீயா, வக்கிரப் பார்வை, வாய்த் திக்கல், பைத்தியம், போன்ற நோய்கள் எண்ணங்க ளின் சீர்கேட்டால் வருகின்றன. எண்ணங்களை முறையாக ஒழுங்கு படுத்துவதின் மூலம் இவற்றை முற்றிலுமாகக் குண மாக்கிவிடலாம், இன்னும் பல நோய்களை எண்ணங்களா லேயே தீர்த்துவிட முடியும் என்று தற்கால மருத்துவ அறி ஞர்கள் கண்டு கூறியுள்ளார்கள். உடலின் பல்வேறு அக,புற அங்கங்களின் செயல்முறைகளை அறுதியிட்டுக் கூறியுள்ள மனோதத்துவ, மருத்துவ அறிஞர்கள் எண்ணங்களின் அள விடற்கரிய ஆற்றலை இன்னும் சரியாகக் கணிக்க முடிய வில்லை'' என்று கூறியுள்ளார்கள்.

நம்மை நாமே உள்நோக்கி நமது எண்ணங்களைச் சரி யாகப் பார்ப்பதற்கு சமயம் உதவுகிறது. நமது எண்ணங்

களுக்கு நாம் அடிமையாகிவிடாமல் அவற்றை அடக்கியாள எல்லாம் வல்ல இறைவனின் பேரருட் துணை வேண்டும். உயிர்வாழ வயிற்றுக்கு இரை தேவைப்படுவதுபோல உயர் வாழ்க்கை வாழ மனதிற்கு இறை உணர்வு தேவை.

நமது இறைவனைக் கூட நம்மவர் சச்சிதானந்த மூர்த்தியாகவே கண்டுள்ளார்கள். சத்து+சித்து+ஆனந்தம். சத்–சத்தியம், உண்மை, சித்–சித்தம், அறிவு; ஆனந்தம்–எல்லையற்ற இன்பம்; இறைவனைக் கூட உண்மை அறிவால் ஏற்படும் பேரானந்தமாகவே நமது அறவோர்கள் கண்டுள்ளார்கள்.

எண்ணங்கள் நமது உடலை, அறிவை. ஆன்மாவை ஆட்டிப் படைக்கிறது. எண்ணங்கள் நமது கலை, இலக்கிய படைப்பாற்றலைக் கட்டுப்படுத்துகிறது. இவ்வெண்ணங்களை நாம் உண்ணும் உணவில் ஒழுங்குகளை ஏற்படுத்துவதின் மூலமும்; சிறந்த நூல்களை ஆழ்ந்து படிப்பதன் மூலமும் ஆசனங்கள், பிராணுயமம் போன்ற யோகப்பயிற்சிகள் மூலமும் தனிமையான சிந்தனைகள் மூலமும், ஆழ்ந்த வழிபாட்டின் மூலமும் தூய்மைப் படுத்தி உயர்மானுடத்தை நம்மில் படைத்துக் கொள்ளலாம்.

———

(தொடரும்)

# புதுடெல்லியில் ஆண்டாள் திருக்கல்யாண விழா

புதுடெல்லி ஆகஸ்டு 16

திருப்பாவை பாடியருளிய ஆண்டாள் திருநக்ஷத்திரமாகிய ஆடிப்பூர நாளில் டில்லி சைவப் பேரவையின் சார்பில் கரோல்பாக்கில் உள்ள திரு எம். எஸ். பி. சண்முகம் இல்லத்தில் இந்த ஆண்டும் வழக்கம் போல் ஆண்டாள் திருக்கல்யாண விழா கொண்டாடப்பட்டது.

மாலையில் கன்னிப் பெண்கள் விளக்குப் பூஜையுடன் இவ்விழா தொடங்கியது. இந்தப் பூஜையில் குமாரிகள் ரமனி, புலனு, அழகு, மன்அருள் நந்தி, அன்னபூர்ணு என்னும் ஐவர் பங்கு கொண்டனர்.

இந்த ஆண்டு, குமாரி உத்தரா சீனிவாசன், குமாரி கே. ஏ. அனந்தலட்சுமி என்னும் இருவர் ரெங்கனுதராகவும், ஆண்டாளாகவும் திருவேடம் அணிந்து கல்யாண வைபவக் காட்சியைத் தத்ரூபமாக நடத்திக் காட்டியது மிகவும் சிறப்பான நிகழ்ச்சியாக அமைந்தது.

தொழிலமைச்சுத் துறை முக்கிய அலுவலர் திரு. ஏ. எஸ். இராஜன் டில்லி வட்டம் கண்டிரோலர் ஆப்போஸ்டல் சர்வீஸ் திரு. தீனதயாளன் டில்லி தீயணைப்புப் படைத் தலைமை அதிகாரி திரு. சிங்காரசுந்தரம், சுவாமிநாத சுவாமி சேவாசமாஜத் தலைவர் காமகோடி பாலகிருஷ்ணன் மற்றும் பல பிரமுகர்கள் குடும்பத்துடன் வந்திருந்ததோடு சுற்று வட்டாரத்திலுள்ள பல குடியிருப்புக்களிலுமிருந்து ஏராளமான பெண்களும் ஆண்களும் வந்து விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அலங்கார நாயகன் 15

திருமதி ஆர். பார்வதி அம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை. நாமக்கல்.

## தேவர் பயங் கெட்டது

முருகனுடைய திருவிளையாடல்களை அழகுபடச் சொல்லி வரும் அருணகிரியார் அவனுடைய குழந்தைப் பருவச் செயல்களையும் சொல்லி வருகிறார். பிள்ளைப் பருவச் செயல்களைப் பாராட்டும் பிரபந்தத்திற்குப் பிள்ளைத் தமிழ் என்று பெயர். காப்புப்பருவம், தாலப்பருவம், செங்கீரைப்பருவம், சப்பாணிப் பருவம் முத்தப்பருவம், வருகைப்பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் பருவம், சிறுதேர்ப் பருவம் சிறுபறைப் பருவம் என்று பத்துப் பருவங்களாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்தையும் சிறப்பித்துப் பாடுவார். பெரியாழ்வார் கண்ணனுடைய பால லீலைகளைப் பாடியது போலவே அருணகிரியாரும் முருகனது பிள்ளைப் பருவத்தை இடையிடையே பாடுகிறார். துயிலுகின்ற முருகக் குழந்தை விழித்துக் கொண்டு காலை உதைத்து விளையாடுகிறது. அதன் உடம்பு அசைகிறது. அப்போது அதன் இடையிலுள்ள சதங்கை குலுங்குகிறது. அந்த ஓசையினால் விளைந்ததை இந்தப் பாட்டில் சொல்கிறார்.

குழந்தை முருகனுடைய விளையாட்டை நினைக்கிறார். அம்பிகையின் குழந்தை அவன். அந்த அம்பிகை பரமசிவனுடைய மனைவி. சிவனும் சக்தியும் சேர்ந்து உள்ள கோலம் அர்த்தநாரீசுரக் கோலம். இருவரும் இணைந்த மூர்த்தி அது, சிவம், சக்தி, முருகன் மூவரும் இணைந்த கோலம் ஒன்று உண்டு. மாகேசுர மூர்த்தங்கள் என்று சிவபிரானுக்குரிய திருக்கோலங்கள் இருபத்து ஐந்தை தனியே வரிசைப் படுத்திப் புராணங்கள் கூறும். அந்த இருபத்தைந்தில் சோமாஸ்கந்த

மூர்த்தமும் ஒன்று அம்மை, அப்பன்சேய் என்று மூவரும் ஒருவராய மூர்த்தி அது. உமாதேவியாரோடும், கந்தனோடும் இணைந்து சிவபெருமான் இருக்கும் கோலம் சிறந்தது. திருவாரூரில் தலைமை பெற்று எழுந்தருளியுள்ள தியாகராஜன் சோமாஸ்கந்தரே, இத்தெய்வக் குடும்பத்தை அப்பர் பாராட்டுகிறார். "நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" என்று சொல்கிறார். அப்பர் சிவபெருமானைப் புகழ்கின்றவர்.

"ஒருவனு யுலகேத்த நின்றநாளோ"

"ஒருவனுமே நின்றானிவ் வுலகெலாம்"
இருவ ராகிநின் றார்கட் கறிகிலான்
அருவ ராவரை யார்த்தவ னார்கழல்
பரவு வாரவர் பாவம் பறையுமே

அவனையே முக்கியமாக வைத்துப் பேசுகிறார் முருகன் அவன் தாய், கணவர் என்று கடைசியில் சிவபெருமானிடம் வந்து முடிக்கின்றார். அருணகிரிநாதரோ சிவன் அவன் தலைவி அவன் குமாரன் என்ற வரிசையில் மூவரையும் வைத்துக் கடைசியில் குமாரனிடம் வந்து முடிக்கிறார்.

"ஒருவரைப் பங்கில் உடையாள் குமாரன்" இங்கே ஒரு புதுமையைக் காண்கிறோம். அருணகிரிநாதர் அர்த்தநாரீசுவரனைச் சொல்லாமல் அர்த்தேசுவர நாரியைச் சொல்கிறார். இறைவனைத் தன் பாகத்திலே கொண்ட உமாதேவி என்று அன்னைக்குத் தலைமை கொடுத்துச் சொல்கிறார்.

"திரிபுராந்தகனை திரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணி"

என்று பின்பும் சொல்வார். உடைமணி என்பது இடையில் கட்டும் ஒருவகை ஆபரணம். அரைநாண் மணியுடன் புனைவது. உடைக்கு மேலும் கட்டுவர் பிற இடங்களிலும் இந்த ஆபரணத்தைப் பற்றி அருணகிரியார் கூறியுள்ளார்.

"மொழுபுகழு முடைமணியு மரைவடமு மடியினையு
முத்தச் சதங்கையுஞ் சித்ர சிகண்டியுஞ் செங்கை வேலும்
(திருப்புகழ்)

இறைமகிழ உடைமணியொடணி சகல மணிகலென
இமயமயில் தழுவுமொரு திருமார்பி லாடுவதும் -(வகுப்பு)

முருகன் திருவரையில் உடைமணி உள்ளது. அதுவன்றிச் சலங்கையும் அணிந்திருக்கிறான். குழந்தை தொட்டிலில் புரளும் போதும் உட்காரும்போதும் நடக்கும்போதும், ஆடும் போதும், நடக்க முயலும்போதும் அந்த சலங்கை ஜல் ஜல் என்று ஒலி செய்கிறது. அது எங்கும் கேட்கிறது.

> ''ஒருவரைப் பங்கில் உடையான் குமாரன் உடைமணிசேர்
> திருவரைக் கிங்கிணி ஓசைபட''

முருகக் குழந்தையின் கிங்கிணி ஓசை அசுரர்களின் காதை எட்டும்படி அவ்வளவு வலிமையுடையதாக இருக்கிறது. அதைக் கேட்டு அசுரர்கள் திடுக்கிடுகிறார்கள். நம் வாழ்வுக்கு இறுதி வரும்போல் இருக்கிறதே என அஞ்சுகிறார்கள். திக்குகளில் அவனுடைய படைவீரர்கள் இருக்கிறார்கள். அங்கெல்லாம் சென்று மோதுகிறது கிங்கிணி ஓசை. திக்குகள் செவிடுபடும்படி அந்த ஓசை எழும்புகிறது.

''திக்குச் செவிடு பட்டு'' கிங்கிணி ஓசை பகைவரை நடுங்கச் செய்தது. எட்டு மலைகளையும் கனகக்குன்றாகிய மேரு மலையையும் அதிரச் செய்தது.

> எட்டு வெற்பும் கனகப்
> பருவரைக் குன்றும் அதிர்ந்தன''

அந்த வெற்பு ஒவ்வொன்றிலும் சூரபன்மனுடைய ஆட்கள் இருந்தனர். அவர்கள் வாழும் ஆலயமாக இருந்த மேரு இப்போது அசுராலயமாயிற்று. எங்கே பார்த்தாலும் தன்னுடைய தளபதிகளையே வைத்தான். முருகப் பெருமான் முன் அறிவிப்பு இல்லாமல் தண்டிக்கிறவன் அல்ல. இந்த ஓசையைக் கேட்டாவது அசுரர்கள் திருந்தட்டும் என்று தன் கிங்கிணி ஓசையை அசுரர்கள் இருந்த இடங்களுக்கெல்லாம் கேட்கும்படி பரவச் செய்தான். இந்த ஒலி அவர்களை நடுங்கச் செய்தது, அவர்கள் வாழும் இடங்களை அதிரச் செய்தது. சில நேரம் அந்த அச்சம் இருந்தது. பிறகு பழையபடி தம் செயல்களை மேற்கொண்டனர். அசுரர்களிடம் உள்ள இந்த நிலையற்ற இயல்பு மனிதனிடமும் உள்ளது. ஒவ்வொரு மனித

னிடமும் அசுர இயல்பும், தேவ இயல்பும் கலந்தே இருக்கின்றன. அசுர இயல்புகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போக்கிக் கொண்டு வந்தால் நன்மை உண்டாகும்.

முருகனது கிங்கிணி ஓசையைக் கேட்டுத் தேவர்கள் மகிழ்ந்தார்கள். "தேவர் பயம் கெட்டதே" முருகனது கிங்கிணி ஓசையின் இனிமையை இங்கே அருணகிரிநாதர் சொல்லவில்லை. முருகன் கிங்கிணியை அணிந்ததால் விளையும் வீர விளைவுகளைக் கூறுகிறார். கிங்கிணியைப் புகழ்வது போல முருகனின் வீரத்தைக் காட்டுகிறார்,

"ஒருவரைப் பங்கில் உடையாள்
  குமாரன் உடை மணி சேர்
திருவரைக் கிங்கிணி ஓசை
  படத் திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட்
  டெட்டு வெற்பும் கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன
  தேவர் பயங் கெட்டதே"

———

(தொடரும்)

# சிவலிங்கப் பெருமான்

**[25–மகேசுவர மூர்த்தங்கள்]**

திருமுறைக் கலைஞர்
**வித்துவான்; தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள்**
*திருச்சிராப்பள்ளி–2*

---

*[மலர்–26 418ம்–பக்கம் தொடர்ச்சி]*

சகளநிட்களசிவம்–சிவலிங்கப் பெருமான் – இவரைக்கல் முதலியவற்றில் அமைத்துப் பூசித்து வழிபடத்தக்கது; சிவாலயம் முதலியவற்றில் தாபிக்கப்பெற்ற சிவலிங்கம் **அசவலிங்கம்** எனவும், ஆன்மார்த்தமாக வைத்துப் பூசிக்கும் சிவலிங்கம் **சலலிங்கம்** எனவும் பெயர் பெறும் அசவம் – அசைவு அற்றது; சலம்-அசைவு உடையது.) இச்சகள நிட்கள மூர்த்தி.

**சகளத்திருமேனி – அதிகாரசிவம்:**

சகளசிவ வடிவம் மகேசுவர (ஈசுவர) தத்துவத்தில் உள்ளது. அது **மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன்** என நான்காம். சதாசிவ மூர்த்தியின்–சிவலிங்க மூர்த்தியின் அம்சத்தில் ஆயிரத்தில் ஒரு கூற்றினின்றும் மகேசுவரன் தோன்றியவர் ஆவர். மகேசுவரன் அம்சத்தில் ஆயிரத்தில் ஒரு கூற்றினின்றும் உருத்திரனும், மகேசுவரன் அம்சத்தில் கோடியில் ஒரு கூற்றினின்றும் விஷ்ணுவும், விஷ்ணு அம்சத்தில் கோடியில் ஒரு கூற்றினின்றும் பிரமனும் தோன்றியவர் ஆவர்.

இவர்களுள், மகேசுவரனே முதன்மையான மூர்த்தி ஆவர்; ஈசுவரதத்துவத்திலே மகேசுவரரின் சூக்கும அதிகாரத்தால் உருத்திரன் அழித்தலையும் அருளலையும் செய்வன்; சுத்த வித்தையிலே தூல அதிகாரத்தால் பிரமன் படைத்தலையும், விஷ்ணு காத்தலையும், மகேசுவரன் மறைத்தலையும் செய்வர்.

பிரமன் விஷ்ணு இவ்விருவர்களிடத்தும் முதல்வனது சிவ சத்தி பதிந்துநின்று செலுத்துதலால் இவர்கள்மகேசுவரரோடு ஒப்பாக வைக்கப்பெற்றார்கள். சகளசிவத்துடன் ஞானசத்தி குறைந்தும், கிரியாசத்தி மிக்குநின்றும், ஞானசத்தி மிக்கும் கிரியாசத்தி குறைந்து நின்றும் வியாபிக்கும் நிலையில், அச் சிவம் **அதிகாரசிவம்** எனப் பெயர்பெறும். அதிகாரசிவம் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்வது.

சகளசிவத்துடன் ஞானசத்தி குறைந்து கிரியாசத்தி மிக்குநின்றபோது **மகேசுவரன்** எனவும், ஞானசத்தி மிக்குக் கிரியாசத்தி குறைந்து நின்றபோது **சுத்தவித்தை** எனவும் பெயர் வழங்கப்பெறும்.

**மகேசுவர மூர்த்தி வகை:**

சகளத் திருமேனியாகிய மகேசுவர மூர்த்தம் இருபத்தைந்து பேதமாகும். இம்மூர்த்தம் யாவும் எல்லா அவயவ உறுப்புகளும் கண்ணால் காணும்படி இருக்கும்; அதனால், மகேசுவரர் சகளசிவம் எனப்படுவர்.

''சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிட்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர் சக்கரப்பிரதானர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தட்சிணாமூர்த்தி இலிங்கோற்பவர்'' என, மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்து ஆகும்.

இன்னும் சரபமூர்த்தி, திரிபாதமூர்த்தி, கங்காதரமூர்த்தி, ஏகபாதத்திரி மூர்த்தி, அந்தகாரி (பைரவமூர்த்தி) வடுக மூர்த்தி (சட்டநாதர்) பாசுபதமூர்த்தி, க்ஷேத்திரபாலக மூர்த்தி முதலிய மூர்த்திகள் மகேசுவர மூர்த்திகளின் பேத மாவர்.

''மதியணி புன்சடை யார், உமை கேள்வர், மழவிடையார்
மதியின் நடம்புரி வார்கலி யாணர் தலையிலுண்பார்
மதனைச் செற்றவர், காலற்கும் காலர் எயிலெரித்தார்
துதியின் சலந்தர னுரை வதைத்த சுதந்தரரே. 1

''அத்தி உரித்தவர் வேள்வி அழித்தவர் மாலத்தனுர்
சத்தியோர் பாகர் கிராதர்கங் காளர்சண் டேசருக்குச்
சித்தி அளித்தவர் ஆவாலம் உண்டவர், செம்பொறியான்
பத்தியி னுக்கொரு சக்கரம் ஈந்த பரம்பரனே'' 2

''கரிமுக னுர்க்கருள் செய்தார்சோ மாக்கந்தர், காலொன்றுளார்,
உரிய சுகாதனர் ஞானுேப தேசர்லிங் கத்துற்ருர்
இருபதி னுேடைந்து விக்கிர கங்களென் னும்இவர்தாம்
தெரிவுறக் கொண்டெமைத் தாம்ஆளவந்த செயலிதுவே'' 3

— *சிவபுராணம்*

இம்மகேசுவர மூர்த்திகளின் வரலாற்றைக் கந்தபுராணம் காஞ்சிபுராணம் பற்பல தலபுராணங்கள், சிவபராக்கிரமம் முதலிய நூல்களில் காண்க. இங்கு விரிக்கிற் பெருகும்.

இம்மகேசுவர மூர்த்திகளைச் சிலேயில் (-கல்லில்) அமைத்துப் பிரதிஷ்டை செய்திருந்தால் அம்மூர்த்தி, **அசல மகேசுவர லிங்கம்** எனவும் செப்பு விக்கிரமாக அமைத்திருந் தால் அம்மூர்த்தி, **சலனமகேசுவர லிங்கம்** எனவும் பெயர் பெறுவர். இச்சகள மூர்த்தியினே **உருவலிங்கம்** அல்லது **மகேசுவரலிங்கம்** என்றும் சொல்லப்பெறும்.

இருபத்தைந்து மகேசுவர மூர்த்திகளில், சிவலிங்க மூர்த்தியின் **ஈசானமுகத்தின்** அம்சத்தில் ஆயிரத்தில் ஒரு கூற்றைப் பெற்றவர்: சோமாஸ்கந்தர், நடராசர், இடபாரூடர், சந்திரசேகரர், கலியாணசுந்தரர் என்ற ஐவர் ஆவர்.

**தற்புருடமுகத்தின்** அம்சத்தில் ஆயிரத்தில் ஒரு கூற்றைப் பெற்றவர்: பிட்சாடனர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராரி என்ற ஐவர் ஆவர்.

**அகோரமுகத்தின்** அம்சத்தில் ஆயிரத்தில் ஒரு கூற்றைப் பெற்றவர்: மாதங்காரி, வீரபத்திரர், தட்சிணமூர்த்தி, கிராதகர், நீலகண்டர் என்ற ஐவர் ஆவர்.

**வாமதேவமுகத்தின்** அம்சத்தில் ஆயிரத்தில் ஒருகூற்றைப் பெற்றவர்: கங்காளர், சக்கரப்பிரதானர், கசமுகாநுக்கிரகர், சண்டேசாநுக்கிரகர் ஏகபாதர் என்ற ஐவர் ஆவர்.

**சத்தியோசாதமுகத்தின்** அம்சத்தில் ஆயிரத்தில் ஒரு கூற்றைப் பெற்றவர்: இலிங்கோற்பவர், சுகாசினர், உமாமகேசுவரர், அரியத்தர், அர்த்தநாரீசுரர் என்ற ஐவர் ஆவர்.

இம்மகேசுவர மூர்த்திகள் இருபத்தைவரும், இவர் பேதமாக உள்ள பிறமூர்த்திகளும், சிவலிங்க மூர்த்தியின் அம்சத்தைப் பெற்றதோடு அல்லாமல் படைத்தல் முதலிய ஐந்தொழில் அதிகாரத்தையும் பெற்றவர் ஆவர்.

சிவாலய உற்சவாதிகளில் மூலஸ்தானச் சிவலிங்க மூர்த்தியின் பிரதிநிதியாக இம்மகேசுவர மூர்த்திகளில் எவரேனும் ஒரு மூர்த்தி நாடோறும் வீதி உலாவிற்கு எழுந்தருளுவதை அறியலாம்.

இம்மகேசுவர வடிவங்கள், **போகவடிவம், யோகவடிவம், கோரவடிவம்** என மூவகைப்படும்.

அம்மையாருடன் இன்ப நிலையில் எழுந்தருளிய சந்திரசேகரர், உமாமகேசுவரர், இடபாரூடர், நடராசர் சோமாஸ்கந்தர் முதலியோர் **போகமூர்த்திகளாவர்**. யோக நிலையில் தனித்தோ அம்மையாருடனோ எழுந்தருளிய சுகாசினர் தட்சிணாமூர்த்தி முதலியோர் **யோகமூர்த்திகளாவர்** வீரநிலையில் தனித்தோ அம்மையாருடனோ எழுந்தருளிய காமாரி, காலாரி, மாதங்காரி, கங்காளர், வீரபத்திரர் முதலியோர் **கோரமூர்த்திகளாவர்**.

இம்மை மறுமை இன்பங்களைப்பெற விரும்புவோரும் உலகில் புகழை விரும்புவோரும் போக மூர்த்தியினையும், வீடுபேற்றைப் பெற விரும்புவோர் யோகமூர்த்தியினையும், உலகில் பகையினை வெல்ல விரும்புவோரும், வினைகளைப் போக்கக் கருதுவோரும் கோர மூர்த்தியினையும் வழிபடல் வேண்டும் என நூல் கூறும்:

> ''போகியாய் இருந்துஉ. யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்;
> யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்;
> வேகியா னுற்போல் செய்த வினையினை வீட்டல் ஓரார்;
> ஊகியா மூடர் எல்லாம் உம்பரில் ஒருவன் என்பர்''

— *சிவஞான சித்தியார்-சுபக்கம்*

சகளமூர்த்தியாகிய மகேசுவராதி வடிவங்கள், தோல் இரத்தம், மாமிசம் என்பு முதலிய தாதுக்களால் ஆக்கப் பெற்ற மனித அசுத்ததேகம் போன்றது அன்று. அவை விசுத்தமாய் சுத்த ஞானரூபமாகிய சிவசத்தி வடிவே ஆகும்.

> "காயமோ மாயை அன்று காண்பது சத்தி தன்னால்." எனவும்
> "சத்திதன் வடிவேது என்னில் தடையிலா ஞானம ஆகும்." எனவும்

வரும் அடிகள் சிவஞான சித்தியார் சுபக்கம்.

**சிவலிங்கபூசை:**

ஆலயங்களில் உலகம் செழித்து நலமுற வாழும் பொருட்டுப் பூசிக்கப்பெறும் இலிங்கபூசை **பரார்த்தலிங்க பூசை** எனவும், நம் வீடுகளில் நமது நலம் ஓங்கி வளரும் பொருட்டுப் பூசிக்கப்பெறும் இலிங்கபூசை **ஆன்மார்த்தலிங்க பூசை** எனவும் பெயர் பெறும்.

பரார்த்தலிங்கம் **சுயம்புலிங்கம், காணலிங்கம் தைவிக லிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம்** என ஐவகைப்படும்.

பரார்த்தலிங்கம் எனினும் தாவரலிங்கம் எனினும் ஸ்திர லிங்கம் எனினும் அசலலிங்கம் எனினும் ஒக்கும்.

பூமி, நீர், மலை இவற்றில் தானே தோன்றிப் பிரமாதி தேவர்களால் தாபித்துப் பூசிக்கப்பெற்ற இலிங்கம் **சுயம்பு லிங்கம்**. வாணாசுரனால் பூசிக்கப்பெற்று நருமதை முதலிய நதி தீரங்களில் போடப்பெற்ற **வாணலிங்கமும்** சுயம்புலிங்கம் ஆகும். வாணலிங்கம் மிகப்பெரியதாய் இருப்பதைப் பரார்த் தமாகவும், மிகச் சிறியதாய் உள்ளதை ஆன்மார்த்தமாகவும் பூசிப்பர். கணபதி சுப்பிரமணிய முதலிய கணங்களால் தாபித்துப் பூசிக்கப்பெற்ற இலிங்கம் **காணலிங்கம்**. பிரமன், திருமால், இந்திரன் முதலிய தேவர்களால் தாபித்துப் பூசிக் கப்பெற்ற இலிங்கம் **தைவிகலிங்கம்**. இருடிகள், இயக்கர், அசுரர் முதலியோர்களால் தாபித்துப் பூசிக்கப்பெற்ற இலிங் கம் **ஆரிடலிங்கம்**. மனிதர்களால் தாபித்துப் பூசிக்கப்பெற்ற இலிங்கம் மானுடலிங்கம் ஆகும். இவ்விலிங்கங்களும் சகள நிட்களத் திருமேனியே ஆம்.

மனிதர்தா பித்தலிங்கம் மாதவர் வானோர் மற்றைப்
புனிதராம் கணங்கள் பூசைபுரிந்திடும் இலிங்கம் என்றும்
பனுமிவை நான்குந்தானே படிதனில் உதித்த லிங்கம்
எனுஞ்இத னோடும் ஐந்தும் பரார்த்தமென்று எணுக என்றும்.

— அருணகிரிபுராணம்

மானுடலிங்கத்தினும் ஆரிடலிங்கமும், ஆரிடலிங்கத்தினும் கணலிங்கமும், கணலிங்கத்தினும் தைவிகலிங்கமும், தைவிகலிங்கத்தினும் சுயம்புலிங்கமும் உயர்ந்ததாகும். சுயம்பு லிங்கத்திலும், வாணலிங்கத்திலும் சிவபெருமான் எப்பொழுதும் சாந்தித்தியமாக எழுந்தருளி இருக்கின்றார் என நூல் கூறும்.

சிவாலயத்தில் மூலஸ்தானத்திலோ, அல்லது தனி இடத்திலோ பிரதிஷ்டை செய்து பூசிக்கும் சிவலிங்கம் திருமுகங்களைப் பெற்றிருக்கின் அது **முகலிங்கம்** எனப் பெயர் பெறும். இவ்விலிங்கம் பெரும்பாலும் மானுடலிங்கத்தின் பாற்படும்.

பரார்த்த சிவலிங்கச் சிவநாபத்தில் 5-4-3-2-1, அமைந்த திருமுகங்களும் உள்ளன: சிவநாபத்தில் கிழக்கே மேல் பாகத்தில் ஒரு திருமுகமும், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு இந்நான்கு பக்கங்களிலும் நான்கு திருமுகங்களும் ஆக ஐந்து திருமுகமுடைய இலிங்கம் **பஞ்சமுகலிங்கம்** எனப்படும். இத்திருமுகங்கள் முறையே ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் எனப் பெயர் பெறும் சிவநாபத்தில் கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு இந்நான்கு பக்கங்களிலும் நான்கு திருமுகங்கள் உடைய இலிங்கம் **சதுர்முகலிங்கம்** எனப்படும். இத்திருமுகங்கள் முறையே தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் எனப் பெயர் பெறும். சிவநாபத்தில் கிழக்கு, தெற்கு, வடக்கு இம்மூன்று பக்கங்களிலும் மூன்று திருமுகங்கள் உடைய இலிங்கம் **திரிமுகலிங்கம்** எனப்படும். இத்திருமுகங்கள் முறையே தற்புருடம், அகோரம், வாமதேவம் எனப் பெயர் பெறும். சிவநாபத்தில் கிழக்கு, மேற்கு இவ்விரண்டு பக்கங்களிலும் இரண்டு திருமுகங்கள் உடைய இலிங்கம் **துவிமுகலிங்கம்** எனப்படும். இத்திருமுகங்கள் முறையே

தற்புருடம், சத்தியோசாதம் எனப் பெயர் பெறும். சிவநாபத்தில் கிழக்குப் பக்கத்தில் மட்டும் ஒருதிருமுகம் உடைய இலிங்கம் ஏகமுகலிங்கம் எனப்படும். இத்திருமுகம் தற்புருடம் எனப் பெயர் பெறும்.

பஞ்சமுக, சதுர்முக லிங்கமுள்ள ஆலயத்தில் நான்கு பக்கம் திருவாயிலும், திரிமுகலிங்கமுள்ள ஆலயத்தில் மூன்று பக்கம் திருவாயிலும், துவிமுக லிங்கமுள்ள ஆலயத்தில் இரண்டு பக்கம் திருவாயிலும், ஏகமுகமுள்ள ஆலயத்தில் ஒரே பக்கம் திருவாயிலும் அமைந்து இருக்கும் எனச் சித்தாந்த சாராவளி என்ற நூல் கூறுகிறது.

சிவலிங்கச் சிவநாபமாகிய உருத்திரத்திலேயே திருமுகம் சேர்ந்து இருக்கும். கிரீடம், திருமுகம், கழுத்து தோள்கள், மார்பு இவை மட்டும் நன்கு வெளிப்பட்டும், மற்றைய உறுப்புகள் யாவும் மறைந்து இருக்கும். ஆகவே **முகலிங்கமும் சகளநிட்களத் திருமேனியே** ஆகும்.

முகலிங்கமே அன்றிச் சிவலிங்க உருத்திர பாகத்தில்சுற்றிலும் 1001-உருத்திர (குழவி) வடிவம் அமைத்துள்ள சிவலிங்கம் **சகஸ்ரலிங்கம்** எனவும், 108-உருத்திர வடிவம் அமைந்துள்ள சிவலிங்கம் **அஷ்டோத்திர சதலிங்கம்** எனவும் பெயர் பெறும்.

**ஆன்மார்த்தலிங்கம்** இட்டலிங்கம், க்ஷணிகலிங்கம் என இருவகைப்படும். இட்டலிங்கபூசை **உடையவர்பூசை** எனவும், க்ஷணிகலிங்கபூசை **பார்த்திபபூசை** எனவும் பெயர் பெறும்.

பாணம் அல்லது கல், மணி, படிகம், தாமிரம் முதலியவற்றில் ஏதேனும் ஒரு சிவலிங்கத்தை ஆசாரியரிடம் விரும்பிப்பெற்று ஆயுள் உள்ளவரையும் வைத்துக் கொண்டு நாடோறும் பூசிக்கும் இலிங்கம் இட்டலிங்கம் ஆகும். புற்றுமண், சந்தனம், ஆற்றுமணல், புஷ்பமாலை, வெல்லம், விபூதி முதலியவற்றில் ஏதேனும் ஒன்றில் அமைத்த சிவலிங்கம் ஒன்றை ஆசாரியனிடம் விரும்பிப்பெற்று ஆயுள் உள்ளவரை

யும் நாடோறும் பூசித்த பின்னர் கைவிடப்படும் இலிங்கம் க்ஷணிகலிங்கம் ஆகும்.

இட்டலிங்கம் பெற்றுப் பூசிக்க இயலாதவர் க்ஷணிக லிங்கம் பெற்றுப் பூசை செய்யலாம். இது மிக எளிது. ஆயின் பயன் ஒன்றே.

**முடிவுரை:**

பழத்தின் இரசம் போலவும் விறகில் தீ போலவும் எள்ளில் எண்ணெய் போலவும், பாலில் நெய் போலவும், எங்கும் நிறைந்து மறைந்து நின்ற பரமசிவம், நம்மை மெய் யன்புடன் வழிபடும் தேவர்களுக்கும், மானுடர்களுக்கும், உயிர்களுக்கும் அருள்புரியும் பொருட்டுத் தமது அருவ நிலையிலிருந்து மிக இறங்கி அருவுருவத் திருமேனி அல்லது உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளிய இடமே **ஆலயம்** அல்லது **திருக்கோயில்** ஆகும். பரமசிவம் ஆலயத்தில் தயிரில் நெய் போல நின்று வழிபடும் உண்மை அன்பர்களுக்குத் திருவருள் புரிகின்றார். சிவலிங்க வழிபாடே சிறந்த வழி பாடு, சிறந்த பயனும் ஆம் ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பது ஒளவை மொழி.

> **சிவபுரா ணங்கள் கேளார்; சிவனமர் தலங்கள் சேரார்;**
> **சிவன்நறுந் தீர்த்தம் மூழ்கார்; சிவலிங்கச் சேவை செய்யார்**
> **சிவனடி யாரைக் கண்டால் சிவன்என்றே சென்று போற்ருர்;**
> **சிவசிவ என்னுர் தீராத் தீங்கெல்லாம் செறிய நின்ருர்.**
>
> — *காசிரகசியம்*

முற்றிற்று

# திருமுருகாற்றுப்படை
## உரை விளக்கம்

'செந்தமிழ்ச் செல்வன்'
புலவர்: திரு. சிக்கல், சி. சானகிராமன் அவர்கள்,
சிக்கல் (அஞ்சல்) நாகை [வட்டம்]

-::-

(மலர் 26 408ம் பக்கத் தொடர்ச்சி)

104-118 ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசித்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப; ஒருகை
மார்மொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய, ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொலிய; ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட; ஆங்குஅப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி,

**உரை விளக்கம்:**

முருகப் பெருமானின் அழகிய பரந்த பெருமையுடைய மார்பிலே பொன்மாலை தொங்கி அசைகின்றது. மார்பிலே சிவந்த வரிகள் காணப்படுகின்றன. அவ்வரிகள் தோளளவும் நீண்டுள்ளன. அச்செவ்வரிகளை ஏற்று, ஒளிவீசும், வலிய, நிமிர்ந்த தோட்களையுடையான் முருகன். வேண்டுவார்க்கு வேண்டுவன ஈதலால் வள்ளல் தன்மையால் புகழ் நிறைந்த தோட்கள் கவர்ச்சி மிக்குக் காண்பார் உள்ளம் ஈர்ப்பன அவை. இத்தகு பன்னிரு தோட்களுடையவனுக முருகப் பெருமான் விளங்குகின்முன். இனியும் விபரமாக ஆராயு

மிடத்து முருகனுடைய மார்பும் தோள்களும் எவ்வாறு இருக்கின்றனவெனின், மாலை தவழ்வதும், சாமுத்ரிகா லட்சணரேகைகளை உடையதான மார்பகமும், வலிமையினாலே பெரும்புகழைப் பெற்றனவும் ஒளி பொருந்திய ஆயுதங்களை பகைவர்மீது எறிந்து அவர்களின் நெஞ்சைப் பிளந்து அவற்றை மீண்டும் தம்மிடம் வாங்குகின்றனவுமான தோள்கள்.

இனி, நக்கீரர் முருகனின் பன்னிரு கரங்களின் இயல்புகளைக் கூறுகின்றார். ஆறுமுகங்களுக்குப் பொருந்திய, பொருந்தப் பன்னிரு கரங்களும் தொழில்படுகின்றன. உலகத்து இருளைப் போக்கி ஒளிர்வது ஒரு திருமுகம். அம்முகத்திற்கேற்ப இருகைகள் செயலாற்றுகின்றன. சூரியனது வெம்மையையும் தாங்கி ஆகாய வழியே செல்லும் கடப்பாட்டினையுடைய முனிவர்களைக் காக்கும் பொருட்டு உயர்த்தப்பட்டுள்ளது ஒரு கை இதனுனே இக்கை மாயிருண் ஞாலம் மறுஇன்றி விளங்கப் பல்கதிர் விரித்த முகத்திற்கு ஏற்ற தொழில் செய்ததாயிற்று. இறைவனின் திருவருளொடு தவ வலிமையும் பெற்ற அம்முனிவர்களால் உலக இருள் களையப்படுகின்றது. உயர்த்தப்பட்டுள்ள கைக்கு இணையாகிய கையினை இடுப்பிலே சேர முருகன் வைத்துள்ளான். அடியார்க்கு வரம் கொடுப்பது ஒரு முகம். அடியார்க்கு அருள யானையின் மீது முருகன் வருதலின் அதற்கேற்ப இரு கைகள் செயலாற்றுகின்றன. ஒருகை யானையினை அங்குசத்தைக் கொண்டு செலுத்துகின்றது. அதற்கு ஒத்த மறுகை அழகுடைய ஆடை உடுத்த துடையின்மீது அமைந்தது. இறைவன் தன்பணியினிற்பாரைத் தானே என்று கொள்ளும் இயல்புடையன் என்பதை அவ்விறைவனுடைய திருக்கையின் செயலாக வைத்து ஈண்டு ஓதப்பட்டது. யானை ஊர்வோர் ஒரு கையால் தோட்டியைச் செலுத்துங்கால் மற்றொரு கை தொடையிலே வைத்திருத்தல் இயல்பாதலறிக. வேத வேள்விகளைக் காத்து நிற்பது ஒரு முகம். அதற்கேற்ப இரண்டு கைகள் தொழில் இயற்றுகின்றன. வியக்கத்தக்க பெரிய கேடயத்தை ஒரு கை தாங்கியுள்ளது. இணைக்கரம் வேற்

படையை வலமாகச் சுழற்றுகிறது. மாற்றார் இடையூறு நீங்க வேள்விகாக்கும் திருக்கோலம் இதனால் பெறப்பட்டது. வேள்வி செய்வார்க்கு இடையூறுற்றுழி அதனை அகற்றப் போர்ப் படையுடன் வரவேண்டுதலான், இத்திருக்கைகளின் செயல் ''ஒரு முகம், மந்திர விதியின் மரபுளி வழாஅ அந்த ணர் வேள்வியோர்க்கும்மே'' என்ற திருமுகத்தின் செயற்குப் பொருந்துவதாயிற்று.

மெய்ஞ்ஞானம் அருளுவதாக ஒரு முகம் விளங்குவது அதற்கேற்ப இரு கரங்கள் தொழிலாற்றுகின்றன. ஒரு கை மார்போடு சேர்த்து வைக்கப்பெற்று மோன முத்திரையோடு விளங்குகின்றது. ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசங் களினின்றும் நீங்கி ஆன்மா, பரம்பொருளை நாடி நிற்றல் வேண்டும் என்பது இம்முத்திரையின் உட்பொருளாம். மோன முத்திரை காட்டும் கைக்கு இணைக்கரம் மார்பின் மாலையோடு சேர்ந்து திகழ்கின்றது.

வீரத்தொடு அவுணர்களை அழித்துக் களவேள்வி செய்து களிப்பது ஒரு முகம். அதற்கேற்ப இரண்டு கைகள் செயல் படுகின்றன களவேள்வி நடைபெற ஒரு கையை உயரத் தூக்கி கட்டளையிடுகின்றான் முருகன். அணிந்துள்ள வளை முழங்கைப் புறமாகக் கீழ்நோக்கி நழுவ ஒரு கை மேல் நோக்கி உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு ஒப்பான மறுகரம் களவேள்விக்குரிய இனிய ஓசையுடைய மணியினை மாறி மாறி ஒலிக்குமாறு அசைகின்றது.

வள்ளியொடு நகை அமர்ந்து விளங்குவது ஒரு முகம். அம்முகத்திற்கேற்ப இரு கைகள் தொழில் மேற்கொண்டுள் ளன. ஆணும் பெண்ணுமாகக்கூடி இல்லத்திருந்து இன்பம் துய்த்து இனிது வாழ்வதற்கு இறைவனின் நல்லருள் தேவை. இவ்வருளினைச் செய்யும் முருகன் வள்ளி கணவனாக விளங் கித் தான் இன்புறும் நிலையிலே நின்று உலகிற்கும் இன்பத் தினைச் செய்கிறான்.

இல்லற இன்பத்திற்கு இவ்வுலகில் இன்றியமையாதது மழை. ஆதலால், முருகப் பெருமானின் ஒரு கை நீலநிற

முடைய ஆகாயத்திலிருந்து மிக்க மழையினைப் பொழியும்படி செய்கிறது. இதற்கு இணைக்கரம் வானுலக மகளிர் மண மாலையினைச் சூடும்படி செய்து விளங்குகின்றது. இங்ஙன மாக முருகப் பெருமானின் பன்னிரு கரங்களும் ஆறுமுகங் களுக்குப் பொருந்த செயல்பட்டுத் திகழ்கின்றன.

119-125 அந்தரப் பல்இயம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம் தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரை செலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதா அன்று

**உரை விளக்கம்:**

ஆறுமுகங்களொடும், பன்னிருகரங்களொடும் முருகன் எழுந்தருள்கின்றான். ஆகாயத்தே துந்துமி முதலான பல இசைக் கருவிகள் முழங்குகின்றன. நல்ல வயிரம் பாய்ந்த கொம்புகள் ஒலிக்கின்றன. வெண்மையாகிய சங்குகளின் ஓசை உண்டாகின்றது. வலிமையுடைய இடிபோலும் முரசம் சப்திக்கின்றது. பல புள்ளிகளையுடைய தோகை யுடைய மயிலாகிய வெற்றிக் கொடியும் அகவி ஒலிக்கின்றது. இங்ஙனம் மங்கல ஓசையோடு முருகன் ஆகாய வழியாக விரைந்து செல்லுதலை மேற்கொண்டு, உலகத்தார் அனைவரா லும் புகழப்பெற்ற மிக உயர்ந்த மேலான சிறப்பினையுடைய திருச்சீரலைவாயிடத்துச் சென்று தங்கியுள்ளான். திருச்சீரலை வாயில் தங்குதல் அவனது நிலைபெற்ற பண்பாம்.

திருச்சீரலைவாய்ப் பதிகத்தில் முன்பு கூறியபடி அர்ச்சா ரூபமாய் ஆறுமுகமும் பன்னிரு புயமும், யானை வாகனமும் கொண்டு ஐந்தொழிலும் இயற்றும் ஆகம புருசனாக சித்தரிக் கப்படுகின்றான் முருகன். கோயில் கொண்டருளும் விக்ரகங் கள் வெறும் கல்லும் மண்ணும் சேர்த்துச் செய்யப்பட்ட உருவங்களன்று. அவைகளின் அமைப்பு ஆகமங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் பெரிய தத்துவார்த்தங்களை உட்பொருளாய்க் கொண்டு விளங்குவன.

விக்ரக அமைப்பின் தத்துவார்த்தம் தெரியாதவர்களுக்கே அதுவெறும் உருவமாகத் தோன்றும். இவ்வாறு ஆறுமுக விக்ரகத்தின் தத்துவார்த்தம் கூறப்பட்டது. ஆகவே திருச்சீரலைவாய் முருகன் ஆரணங்கண்ட ஆகம முருகன், கந்த புராணத்தில்,

அருவமு முருவமாகி யநாதியாய்ப் பலவாயொன்றாய்ப் பிரமமாய் நின்ற பிழம்ப தோர் மேனியாகக் கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே யொரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய என்றார்.

இதுதான் அர்ச்சையின் தத்துவம் உயிர்கள் நிற்குணோபாஸனை செய்வது கடினமாதலின் சகுணோபாஸனையில் படிந்துப் படிப்படியாய் அதன் தத்துவம் தெரிந்து நற்குணோபாஸனைக்கு ஏறவேண்டும். அது விக்ரக அமைப்பும் அதன் தத்துவமும் தெரிந்தவர்களுக்கே முடியும். அது தெரிய ஆகமங்கள் கற்க வேண்டும். ஆகமம் அறியாதான் முருகனை அறியமாட்டான் என்பதையும் கந்தபுராண ஆசிரியரே;

''தத்த மாற்றங்கணிறு வியசமயிகள் புலரும்
கத்து புன்சொலை வினவினரவன் செயல்காணார்
சுத்தவாதுன முதலிய தந்திரத் தொகுதி
யுய்த்துணர்ந்திடு நீரரே யொரு சிறிதுணர்வார்.'' என்றார்.

ஆலய வழிபாடுகள் யாவையும் பெரும் தத்துவங்கள் நிறைந்தவை இதையறியாத தற்கால மாந்தர் ஆலயங்களையும், விக்கிரகங்களையும் இகழ்ந்து பேசி இடுக்கண் படுகின்றனர். ''விசும்பு ஆருக'' என்றதில் ஆறுமுக தரிசனம் ஞானாகாஸத்தில் தான் கிடைக்கும் என்பதைக் காட்டிற்று. இதை அருணகிரியார் தமது அலங்காரப் பாடல் ஒன்றில்,

''பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே.'' என்று

கூறியிருப்பதுவும் காண்க.

இவ்வாறு திருப்பரங்கிரியில் அருவுருவமான இயற்கையை முருகன் என்று விராட் சொரூபத்தையும், சீரலைவாய்ப் பதிகத்தில் ஆகமம் கண்ட தட்த்த லட்சணத்தையும்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

ஸ்ரீ ஆதிசங்கரரின்

# ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம்

திரு. வித்யாதீர்த்ததாஸன் அவர்கள்;
புதுக்கோட்டை (கிழக்கு)

(தமிழாக்கம், கோவை கவியரசு ஸ்ரீ நடேசக்கவுண்டர் அவர்கள்)

## 6. திருமுகத் தாமரைகள்

"உலகைப் படைத்தவன் நானே! வேதங்களைக்கொண்டு நானே படைத்தேன். நான் வேத மறிந்தவன்" எனக்கூறிய பிரமனை, "வேதமிருக்கட்டும். ஓம் எனும் முதல் எழுத்தினது பொருளைக் கூறு" என முருகன் கேட்க பிரமன் பிரமித்தான் "ஆஹா! ஒரெழுத்துக்குக் கூடப் பொருள் தெரியாத நீயா உலகத்தைப் படைத்தாய்!" என எள்ளி நகையாடிய முருகன் பிரமனின் தலையில் புடைத்தான்.

எட்டோணுத அக்குடிலையின் பயன்இனைத்தென்றே
கட்டுரைத்திலன் எனமயங்கலும் இதன்பொருள்கருதாய்
சிட்டிசெய்வதித் தன்மையதோ வெனுச்செவ்வேள்
குட்டினுன் அயன்நான்கு மாமுடிகளும் குலுங்க

பிரமனைச் சிறையில் தள்ளியபின் தானே உலகத்தைப் படைத்துக் காக்கலானுன்.

ஒருகரந்தனில் கண்டிகை வடம்பரித்து; ஒருதன்
கரதலந்தனில் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரதமோட பயந்தரப் பரம்பொருள் மகனேர்
திருமுகங்கொடு சதுர்முகன்போல் விதிசெய்தான்

இவ்வாறு உலகத்தைப் படைத்துக் காத்தான்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கூறி அடுத்த ஆவினன்குடி பதிகத்தில் சொருப லட்சணம் கூறுகின்றூர். இதுவரைச் சொல்லப்பட்ட இரண்டு இறை நிலைகள் சில ஆன்ம கோடிகளின் பக்குவ நிலைக்கே ஒவ்வும். ஆதலால் மூன்ருவதாக அருவமானபதி லட்சணம் கூறுகின்றூர்.

(தொடரும்)

ஒரு யானை மதம்பிடித்துத் திரிந்தது. முருகன் தன் திருக் கரத்தால் அதன் துதிக்கையை வருடி மதத்தையடக்கினன்.

சிவபெருமான் மார்க்கண்டனுக்காகயமனை யடக்கினன். அதே சிவபெருமான்தான் முருகனைத் தோன்றினன். ஆதலால் யமனையடக்கிய சிவபொருமானின் செயலையும் முருகனுடையதாகவே பாடுகிறார் ஆசாரிய சுவாமிகள்

சூரனை வென்று தேவலோகத்தைக் காத்து உலகிற்கு பயமேயில்லை என்று அபயஸ்தமளித்த உன் திருக்கரம் எனக்கும் துணையாகட்டும் என்கின்றார்.

அயனைப்புடைத் தண்டநிறையைப் புரந்தே
ஆனைக்கை வென்றந்தகனையும் துரந்தே
துயரிந்த்ரன் பகைவென்ற பயமென்ற நின்கை
துணைசெய்க உயர்செந்தில் இறைவா எமக்கே 12

முருகனுடைய திருமுகங்கள் சந்திரனைப் போன்று குளிர்ச்சி பொருந்தியவைகளாகவுள்ளன. களங்கமற்றவைகளாகக் காணப்படுகின்றன. திலதமிட்டால் களங்கமுள்ளவை போலத் தோன்றுகின்றன. சந்திரன் என்றால் சந்திரன் ஒன்றுதான் ஆறு சந்திரர்கள் கிடையாதே. களங்கமில்லாத சந்திரனும் கிடையாது. குளிர்ச்சியுடன் களங்கமற்று எல்லா திக்குகளுக்கும் ஒளி வீசும் ஆறு சந்திரர்கள் உண்டு என்றால் அவை முருகனது முகங்களுக்குத்தான் ஒக்கும்.

பனியென்றுமுளவாயோர் பங்கம்படாமல்
பரிபூர்ணவொளியோடு பலதிக்கு நிலவை
நனிவீசு மதிமூவிரண்டென்று முளவேல்
நளிர் செந்திலோனுறு முகமொக்குமாலோ 13

முருக! உன் முகங்கள் தாமரை போன்றுள்ளன. புன்சிரிப்பில் தோன்றும் உன் வெள்ளிய பற்கள் வெண்மையான அன்னபட்சிகள் போன்றுள்ளன. உனது திருக்கண்கள் வண்டுகள் போலுள்ளன. உன் உதடுகள் சிவந்து கொவ்வைப்பழம் போன்றுள்ளன. உன் சொல்லோ அமுது போன்றுள்ளது. இப்படிப்பட்ட திருமுகத்தை எப்போது காண்பேன்!.

சிவன்மைந்த நகையென்ற அனமென்று மேவித்
திகழுங்கடைக்கண்களெனும் வன்டுலாவித்
தவவின்சொலமுதூறு கொவ்வைச் செவ்விதழ்சேர்
சலசங்களெனு மாறுமுகமென்று காண்பேன் 14

———

(தொடரும்)

[சிவ சிவ

மகாமகோபாத்தியாய

## டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

திருவான்மியூர், சென்னை–600041

## ஒரு நல்ல வாய்ப்பு

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பிறந்த 121-ஆவது வருடமாகிய இந்த ஆண்டில் தமிழ்மக்கள் அவருடைய நினைவைக் கொள்ளுவதற்கு வாய்ப்பாக அவர் பெயரால் இயங்கும் நூல் நிலைய வெளியீடுகளும், ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களும் சலுகை விலையில் கொடுக்கப்பெறும். ரூ 60/ (அறுபதுக்கும்) அதற்கு மேலும் ரொக்கமாக ஒரே தடவையில் இந்த நூல்களை வாங்குபவர்களுக்கு விலையில் $33\frac{1}{3}$ சதவீதம் தள்ளிக் கொடுக்கப்படும். இந்தச் சலுகை 1–7–75 முதல் 31-3-76 வரை உண்டு. இது சம்பந்தமான தபாற் கட்டணம் இரயில், லாரிக்கட்டணம் புத்தகம் பெறுபவர்களைச் சார்ந்தவை.

புத்தகங்களைப் புதன்கிழமை நீங்கலாக மற்ற நாட்களில் (காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள்) நூல் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி எண் 411697)

விவரங்களுக்குப் பின்வரும் முகவரிக்கு எழுதுக:

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம்,
திருவான்மியூர், சென்னை, 600041.

# கலையும் - மனித மனமும்

திருமதி, ப. உமாதேவி அவர்கள்,
9/49 திரௌபதியம்மன் கோயில் தெரு
அரியாங்குப்பம்—புதுவை-7

———

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பலவிதமான அனுபவங்கள் ஏற்படுகின்றன அந்த அனுபவங்கள் ஏதேனும் ஒரு வழியில் பிறருக்கும் உணர்த்தப்படுகின்றன. அனுபவங்களால் பண்படுத்தப்பட்ட உள்ளத்தில் இருந்தும், கருத்திலிருந்தும் வெளிப்படுபவையெல்லாம், பிற மனத்தையும் பண்படுத்தி, ஒரு நிலைப்படுத்த முயற்சி செய்கின்றன. இவ்வாறு வாழ்க்கையில் பண்பட்ட மனித மனத்தின் அனுபவம், அல்லது நுகர்ச்சியானது கற்பனை நயமுடன் வெளிப்படுத்தப் படுவதே கலை என்ற பெயரில் ஒளிர்கின்றது. அது மனித மனத்தை எவ்வாறு மலர்விக்கின்றது என்று காண்போம்.

மனத்துக்கு இன்பத்தையளித்து, சிந்திக்கச் செய்வதுகலை அது கவின்கலை அல்லது நுண்கலை (Fine Arts) என்றும் கூறப்படும். சிலகலைகள் வாழ்க்கையில் உறுதுணையாக அமைந்து, பொருளாதார நிலையை உயர்த்துவன. மற்றும் சிலகலைகள் மனத்தைப் பண்படுத்தி, வாழ்க்கையில் முன்னேறத்தக்க அறிவு வளர்ச்சியையும். அன்பு மனத்தையும் அளிப்பன. கலை. மனித மனத்தை மாற்றக் கூடியதே தவிர விலையாக்கக் கூடியது அல்ல. விலையாக்கப்படும்போது அதன் தெய்வத்தன்மை அகன்று விடுகின்றது என்பது மறுக்கவோ, மறைக்கவோ இயலாத உண்மை. இதையறிந்துதான் முற்காலத்தில் வாழ்ந்த மன்னர்களும், வள்ளல்களும், ஏன் எளிய மக்களும் கூடக் கலைகளைப் போற்றினர். கலைஞர்களை ஆதரித்தனர்,

கலைகளில் பலபிரிவுகள் உண்டு. காவியம், ஓவியம், சிற்பம், இசை ஆக எல்லாமே கலைதான். செய்யுள் இயற்றுவது ஒருகலையென்றால், செப்பமாய்ச் சமைப்பதும், சுவைப்பதும்

கூட ஒரு கலைதான், இசைபாடுவதும், வசை பேசுவதும், ஓவியம் தீட்டுவதும், ஒப்பாரி பாடுவதும், காளையர் வீரமும், கன்னியரின் அலங்காரமும், கலைகளாகவே வளர்ந்துள்ளதைக் காணலாம். அதனாலேயே கலைகள் அறுபத்துநான்காக வகுக்கப்பட்டன. மேலும் அதற்கு அதிபதியாக ஓர். பெண்ணரசியையும் அமைத்தனர். "ஆக்கல், காத்தல், அழித்தல்" ஆகிய முத்தொழில்களுக்கு ஆடவர்களைப் படைத்தவர்கள், கலைகளுக்கு மட்டும் ஏன் நங்கையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? என்பது வியப்புதரும் வினா. கலைகள் நளினமும், நயமும் கொண்டவை அவைகளைக் கையாள நிதானம் தேவை. எனவேதான் நளினமும், நயமும், அன்பும், அமைதியும் கொண்ட பெண்ணொருத்தியைத் தலைவியாக அமைத்துஅவள் தான் "கலைமகள்" என்பதைக் குறிப்பிட கரங்களில் இசைக் கருவியையும், ஏட்டுச் சுவடிகளையும் அளித்து வழிபட்டனர்.

> "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
> ஏயவுணர் விக்கு மென்னம்மை—தூய
> உருப்பளிங்கு போல்வா ளென்னுள்ளத் தினுள்ளே
> இருப்பளிங்கு வாராதிடர்"

என்னும் பாடல் மேற்சொன்னதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆயகலைகள் அறுபத்துநான்கென்றாலும் மற்றெல்லாக் கலைகளுக்கும் முன்னோடியாகத் தாய்க்கலையாக இருப்பது இலக்கியம். ஓவியமும், சிற்பமும் முதலில் எழுந்ததாகக்கூறப்பட்டாலும், இலக்கியத்தைப் போல் அவை விரைவில் தழைத்தோங்கவில்லை. மனிதனின் அறிவு வளர வளர மொழி வளர்ந்தது. கற்பனை வளர வளர, மொழியின் அடிப்படையில் இலக்கியமும் வளர்ந்து தழைத்தோங்கியது. புராணங்கள் எழுந்தன. இலக்கியத்தையும் புராணத்தையும் உறுதுணையாகக் கொண்டு சிற்பமும், ஓவியமும் வளர்ந்தன, இதனால் பக்திவழி விரிவாகியது.

இலக்கியங்களுள் முதலிடம் பெறுவது செய்யுள் இலக்கியம் நூலுக்கு அழகெனக் கூறப்படும் பத்துவகை அழகுகளில்

''சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல்'', என்னும் அழகுஇன்றி யமையாதது. அந்த வனப்பையடிப்படையாகக் கொண்டு செய்யுள் இலக்கியம் எழுந்ததென்றாலும்,

''சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசையுடைமை யாழமுடைத்தாதல்
முறையின் வைப்பே யுலகமலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே''

என்ற நன்னூலார் கூற்றுக்கிணங்கவே செய்யுள் இலக்கியங்கள் சமைக்கப் பட்டன. இதைப்பற்றி மேனாட்டறிஞரான இர்விங்எட்மன் என்பவர் ''செய்யுட் கலையைப் பற்றிய மொழியின் இயல்புகளை ஆராய்ந்து கூறும்போது அடிக்கடி உயிரெழுத்து மொழிகளைப் பயன்படுத்தினால் இயற்கையாகவேப் புலவன் ஆகலாம்'' என்று கூறுகின்றார். இப்பண்பு எல்லா மொழிக்கும் உண்டு. அதிலும் தமிழிலக்கியத்தில் இப்பண்பு பொலிந்து காணப்படுவதை அதில் தோய்ந்து கிடப்போர் நன்கறிவர்.

இயற்கையழகு மிக்க இடங்களில் முற்காலத்தில் கோயில்கள் இருந்தன என்பது அடியார்களின் பாடல்களால் தெரிய வருகின்றது. தேவாரப் பாடல்களிலும், திருமுருகாற்றுப் படை போன்ற நூல்களிலும், நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திலும், மற்றும் பலவற்றிலும் இதைப்பற்றியச் செய்திகள் விரிவாகவே உள்ளன. இவ்வாறு இயற்கையழகு மிகுந்த இடங்களில் கோயில் கொண்டுள்ள இறைவனை வணங்கிய அடியார்கள் அவன் அருளினால் பாடிப் பரவும் பேறு பெற்றனர்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

என்றெல்லாம் பாடித் துதித்தனர். இவ்வாறு அடியார்கள் பாடுவதை உடனே யாழில் இட்டு இசைப்பது வழக்கமாக இருந்தது என்பது திருப்பாணாழ்வார் மூலம் தெரிய வருகின்

றது. இதனால் இசைக்கலையும் வளர்ந்தது. இசை ஞானமும் கவியுள்ளமும் கொண்டவர்கள், தங்கள் செய்யுட்களுக்கும், பாடல்களுக்கும் தக்க பண்ணடைவு செய்து பாடியும் வந்தனர்.

இலக்கியத்தோடு தொடர்பு கொண்ட இசைக்கலை மக்கள் மத்தியில் உலவ ஆரம்பித்ததும் நல்ல பலன்களே விளைந்தன என்று கூறலாம். கொடிய மனமுள்ளவர்களையும், கொடிய விலங்குகளையும் கூட இசை தன் வயப்படுத்தும் ஆற்றலுடையதாக இருந்தது. இறைவனை ஓராயிரம் நாமம் கூறி வந்தித்து வணங்குவதைவிட காதலாகிக், கசிந்து, கண்ணீர் மல்க நின்று ஒரு பாமாலைப் பாடி அதனைச் சூட்டினால் போதுமே. அவனது தோள்கள் அத்தகையப் பாமாலைகளால் சூழப் பெற்றதுதானே. அதனால்தானே குமரகுருபரர் முக்கண்ணனைப் பற்றிக் கூறுங்கால்,

"வண்டமிழ்க் கடலின் தண்டுறைச் சங்கமும்
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டியல் தேர்ந்தன செல்லுந்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூடல்
இடங் கொண்டிருந்த விமையா முக்கண்" (மதுரைக் கலம்பகம்)

என்றும், அதனாலேயே,

"அரிய வடகலை தமிழ்வளம் பெறச் சேர்த்தவர்"

என்று பகழிக்கூத்தர், தமது திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழிலும் கூறியுள்ளார். மேலும் கண்ணுதற் கடவுளின் தோள்களைப் பற்றிக் குருபரர் கூறிவரும்போது,

"தருசுவையமுதெழு மதுரமதொழுகு
பசுந்தமிழ் மாலைநிரம்பப் புனைந்தன"

என்று சிறப்பித்துக் கூறுகின்றார். இராவணன், இறைவனின் மனதையுருக்க சாமகானம் பாடியதாகப் புராணம் கூறுகின்றது. சிவனின் கரத்தில் உடுக்கும், நாரதரிடம் யாழும் (வீணை என்பாரு முண்டு) இருப்பது இசைக் கலையின் மேன்மையை காட்டத்தானே. இசைக்கலை மக்களை மிகவும் மயக்கியது என்று கூறலாம். வாத்தியம், நாடகம், சங்கீதம் இவை மூன்றும் சேர்ந்து ஒரு கொத்தில் பூத்த மலராகக் கூறுவர்.

''நிருத்த, கீதவாத்தியம்'' என்பர் வடநூலார். தமிழில் ''கொட்டாட்டுப் பாட்டு'' என்று கூறுவர்.

''கொட்டாட்டொடு பாட்டொலி யோவாத் துறையூர்''

என்றும்,

''கொட்டாட்டுப் பாட்டாகி நின்றான்''

என்றும் தேவாரம் கூறுகின்றது. பழந்தமிழர் இதனை வளர்த்துப் போற்றினர் என்பது,

''பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்''

என்னும் பட்டினப் பாலையடியால் தெரியவருகின்றது. மேலும் இசை மிருகங்களையும் அடிமைப்படுத்தும் என்பது,

''காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு''

என்னும் கலித்தொகையடிகளாலும் பிற சங்க இலக்கியப் பாடல்களாலும் அறியலாம். பாலையாழின் இசையைக்கேட்ட ஆறலைக் கள்வர் தம்கையில் உள்ள கொலைக்கருவிகளை எறிந்து விட்டுத் தம் தீய செயலை மறந்து நின்றனர் என்பதை

''ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின்பாலை''

என்று வரும் பொருநர் ஆற்றுப்படை வரிகள் தெரிவிக்கின்றன. பிரௌனின் என்னும் ஆங்கிலப் புலவர் தமது 'Pippa Passes'' என்னும் பாடலிலும், வோர்ட்ஸ் வோர்த் என்பவர் தமது ''Solitary Reaper'' என்னும் பாடலில், மொழி தெரியாமலிருந்தும், அறுவடை செய்யும் பெண்ணின் உருக்கமான பாடல் தமது மனதைக் கவர்ந்ததோடு, அது தம்மை விட்டு அகலாமல் ஒலித்துக் கொண்டேயிருந்ததாகவும் கூறுகின்றார். இவ்வாறே, சர். வில்லியம் காக்ஸ் (Sir. William Cox) என்பவர் தமது ''Orpheus and Eurydice'') என்னும் கதையில் இசைக் கலைஞனை ஒருவன் நரகத்துக்கேச் சென்று தன்னுடைய இனிய இசையால் காவல் புரிந்த கொடிய நாயை மயக்கி, நரகலோக அரசனைத் தன் வசப்படுத்தி மனைவியை மீட்பதாகக் காட்டுகின்றார். இதிலும் இசையின் ஆற்றலே

பேசப்படுகின்றது. மிருகங்களையும் கொடியவர்களையும் கட்டுப் படுத்தச் செய்யும் ஆற்றலுடைய இசைக்கலை, மனதை அமைதிப்படுத்தி நல்ல வழியில் திருப்பவும் உதவி செய்தது என்பது இதனால் புலப்படுகின்றது.

இலக்கியத்தையும், புராணங்களையும், கர்ணபரம்பரைக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு, சிற்பக்கலையும், ஓவியக்கலையும் வளர்ந்தன. நாடகக்கலையும் வளர்ச்சியுற்றது. சிற்பங்கள் அழகிய முறையில், கற்பனை வளமுடன், நுட்பமான முறையில் வடிக்கப்பட்டன. கோயில் கோபுரங்களில், நான்மாடக் கூடங்களில், தூண்களில், பாறைகளில் எல்லாம் இக்கலை வளர்ந்தது. தெய்வச்சிலைகள் கண்ணும், கருத்துமாகப் பக்தியுடன் உருவாக்கப்பட்டன. அவற்றுள் மிக்கச் சிறப்புற்றதும், புகழ் பெற்றதும், நடனமிடும் கண்ணுதற் கடவுளின் எழில் தாண்டவக்காட்சியாகும்.

**பூண்ட பறையறையப் பூதம்மருள**
**நீண்ட சடையான் ஆடுமே**
**நீண்ட சடையான் ஆடுமென்ப**
**மாண்ட சாயல் மலைமகள் காணவே! காணவே!**

என்று கூறிவியக்கத்தக்க அளவில் மிக நுட்பமாக, கண்களைக் கவரும் எழிலுடனும், நெஞ்சையள்ளும் தோற்றத்திலும் வடிக்கப்பட்டது. ஆட்டத்தின் வேகத்தால் வேணியவிழ்ந்து, சடைக்கற்றைகள் நாத்திசையும் பறக்க, கழுத்தில் உள்ள பாம்பு தடுமாறிப் படம் எடுத்து நிற்க, இடையாடை வரிந்து கட்டப்பட்டிருக்க, இடைக்கச்சு பறக்க, நெருப்பு கையில் கொழுந்து விட்டெரிய, உடுக்கை சப்திக்க இடையை நெளித்து, ஒரு பாதம் ஊன்றி, முயலகனை மிதிக்க, முகத்தில் உணர்ச்சி ததும்ப ஆடும் திருக்கோலம் காண்பவரைப் பிணிக்கச் செய்யும் மாண்புடையதாகும். அவர் திருக்கூத்து ஆடியவர் என்பதைப் பகழிக்கூத்தர்.

**"உடைமணி கனக பரிபுர முரல**
**ஒருமுறை பவுரி கொண்ட மெய்க் கூத்தினர்"**

என்று குறிப்பிடுகின்றார். எனவே இசையும், நடனமும் இறைவனால் விரும்பப் பட்டதுடன் அவனே அதற்கு நாயக

ளுகவும் இருந்தான் என்பது புலப்படுகின்றதல்லவா. அதனு லேயே ஆலயங்கள் சிற்பங்களுடன் பொலிந்தன. மாமல்லை யில் பல்லவர்கள் சிற்பக்கலைக் கூடமே அமைத்தனர். பஞ்ச பாண்டவர் ரதங்கள் என்று தவருகக் கூறப்படும் ஐந்து கோயில்கள், பாறைக்காட்சிகள், போர்க் காட்சிகள், கண் ணன் கோவர்த்தனமலை தாங்கி நிற்கும் கோலம், இவையெல் லாம் கவினுறவடிக்கப் பட்டன.

''படருங் கொடுங்கார் சொரிமழைக்குப்
பரிய வரையைக் குடைகவித்து''

நிற்கும் கோலம், அரசனின் தகைமையையும், அண்டி நிற்கும் உயிர்க்கூட்டம் அவனை நம்பி நிற்கும் நிலையும், உள்ளத்து உணர்ச்சிகளையும் தெளிவாகச் சுட்டும் வகையில் அமைத்தி ருப்பது கண்டு மகிழத்தக்கது.

சிற்பக்கலை போன்றே ஓவியக்கலையும் வளர்ந்தது. கோயில் கள், மாளிகைகள், இல்லங்கள், எல்லாமே அவற்ருல் அழகு படுத்தப்பட்டன.

''எவ்வகைச் செய்தியு முவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும்''

என்னும் மதுரைக் காஞ்சியால் ஓவியர்களின் திறமையும், கட மையும் வெளிப்படுத்தப் படுகின்றன.

இவற்றையெல்லாம் காணும்போது இலக்கியக்கலை, பிற கலைகளை ஆதரித்து வளரச் செய்ததோடு, அவைகளால் மன மும் பண்பட்டது என்பது புலனுகின்றது. இலக்கியம் என் ருல் என்ன? (What is Literature?) என்னும் வினுவிற்கு, ''சிறந்த கருத்துக்களின் தொகுதியே இலக்கியம்(''Literature is a Record of Best Thoughts) என்று எமர்சன் (Emerson) என்பவர் கூறியுள்ளார். அந்தச் சிறந்த தொகு திக்கும், அதனையடிப்படையாகக் கொண்டு எழுந்த பலகலை களுக்கும், மக்கள் மனத்தை மாற்றும் ஆற்றல் இல்லாமல் போய்விடுமா என்ன?

கலைகள் தெளிந்த மனத்திலிருந்து பிறப்பவையாதலால் குழம்பிய மனத்தைத் தெளியவைக்கின்றது. பண்புள்ள உள்ளத்திலிருந்து உருவாவதால் பண்பற்ற உள்ளத்தைப் பண்படுத்தி பக்தியை வளர்க்கின்றது. கவலையற்ற மனத்தின் கற்பனைச் சுடராக இருப்பதால் கவலையைப் போக்குகின்றது, இறையுணர்வை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அதை வளர்க்கவும் செய்கின்றது. இதனுல் மனம் தெளிவும், தூய்மையும் பெற்று, இறைவன் வாழும் கமலமலராக மாறுகின்றது.

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடி யிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனுர் வேண்டுவது.

என்று கூறப்படுவதால் இறைவன் வாழவிரும்பும் இதயத்தாமரைத் தூய்மையாக வைத்திருப்பது நம்கடமையல்லவா. அவ்வாறு வைத்திருக்கக் கலைகள் உதவி செய்கின்றன என்று கூறினுல் அது பொய்யில்லையே.

சிவ சிவ]

# அவா அறுத்தல்

திரு. அ. சுவாமிநாதன் அவர்கள்,
*துணை அஞ்சலகத் தலைவர்,*
*அரியாங்குப்பம், 605007.*

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளியத் தமிழ் மறையில் அறத்துப்பால் முதலிடம் பெற்றுள்ளது. இஃது 'இல்லற இயல், துறவற இயல், ஊழ் இயல் என்னும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கி நிற்கின்றது. ஊழ் இயல் என்பது தனிச் சிறப்புடன் நின்று தெய்வவலிமை முன் மனிதனின் வல்லமை எப்படியெல்லாம் செயல்படக்கூடும் என்பதை மிக நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இவ்வுலகில், மனிதன் தனது அறிவுத்தோணி கொண்டு பிறவியாம் பெருங்கடல் நீந்தி வீடுபேறு பெற்றாக வேண்டும் என்பதை வலியுறுத்தவே பல அதிகாரங்களில் பலப்பல நீதிநெறிகளை வள்ளுவர் சொல்லியுள்ளார். பெரும்புலவராம் செந்நாப்போதார் மனிதன் உய்வான் வேண்டி, பிறன்இல்விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை புறங்கூறாமை, பயனில்சொல்லாமை, புலால் மறுத்தல், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை என்று அடுக்கிய வகையில் பல அதிகாரங்களை நூலில் பரவலாகத் தக்க இடங்களில் பதித்து வைத்துள்ளார். ஆனால் ஒரே ஒரு அதிகாரத்தை மட்டும் மிகவும் அற்புதமான விதத்தில் பொதித்துள்ளார் அதுவே ''அவா அறுத்தல்'' என்னும் அதிகாரமாகும். மற்ற அதிகாரங்களைப் போலவே அவாவாமை என்றோ அல்லது அவா இன்மை என்றோ எதுவும் தலைப்பிடாமல் ''அவா அறுத்தல்'' என்று முடி சூட்டியது கண்டு ஆய்வுக்கும், அறிவுக்கும் விருந்தாகிறது.

பிறப்புக்கு வித்தாவது அவாதான், அவா ஒழிந்தால்தான் பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவன் அடிசேர முடியும். அவா என்பது மற்றைய குணங்களைப் போன்றதல்ல. மற்ற குணங்கள் சிலச்சிலதான் ஒவ்வொருவரிடத்தும் இருப்பதை

சமயம்வரும்போது தெரியவரும் ஆனுல், அவா என்பது எல்லா உயிர்க்கும் பொதுவானது. அது இல்லாத உயிரே இல்லை. அது அழிய வழி இல்லாதது. விஞ்ஞான உலகில் பாக்டீரியாக்கள் இரண்டாகி, திரும்பவும் ஒவ்வொன்றும் இரண்டாகி இப்படியே கணக்கின்றி பெருகும் என்பதை அறிந்துள்ளோம். அவா என்பதுவும் ஒரு தீமை செய்யும் பாக்டீரியாதான். அது அடங்கி செத்ததாக நினைக்க இடமே இல்லை. மண்ணுளிப் பாம்புபோல் இருப்பது. நெருப்பிலிட்டு சுட்டால்தான் சாவைத் தழுவிக் கொள்ளும் என்னலாம்.

இதனுலேயே அவாவை அறுத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும், அறுக்க அறுக்க விரைவில் வளருமொரு நச்சுமரமாகும் என்றும் தெளிவுறுத்த வள்ளுவநாயனுர் அறத்துப்பாலில் சற்றே ஈற்றதிகாரமாக இடம் கொடுத்துள் ளார். ஊழ் இயல் தெய்வ வலிமை சுட்டவே தனியே நிற் கிறது. தனி ஒரு அதிகாரம் தனி ஒரு இயலாக நிற்கும் அற்பு தம் உணரலாம். மற்ற குண நலன்களை ஒருங்கே பெற்றிருந் தும் அவா என்பதை மட்டும் அறுக்க வில்லையானுல் பிறவித் தளை நீங்காது. இறைவன் அடியும் சேர முடியாது என்று அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

திருமூலநாயனுர் கூடத் தம் திருமந்திரத்தில் ''ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள், ஈசனே டாயினும் ஆசை அறுமின்கள், ஆசைபடப்பட ஆய்வருந் துன்பம், ஆசை விட விட ஆனந்த மாமே'' என்று கூறியுள்ளதும் இங்கு நமக்கு வலிவூட்டும் கருத்தாகின்றது. அறுத்தல் தொழிலைச் செய்வது கத்தியால் கூட முடியாததாகும். ரம்பம் அல்லது வாளே தக்க கருவியாகும். அதில் எண்ணற்ற கூரிய பற்கள் உள்ளன அது கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அறுக்க அறுக்கத் தான் கடினமான மரம், இரும்பு முதலியன வெட்டப்படும். அது போலவேதான் நம் முள்ளிருக்கும் ''அவா'' என்பதுவும் அறிவுவாளினுல் அறுக்க அறுக்கத்தான் வெட்டப்படும். மற்ற எதனுலும் அவாவைக் கொல்ல முடியாது. ஒருவன் பெற வேண்டுவது ''வேண்டாமை'' என்ற விழுமிய செல்வந்தான் பிறவாமை வேண்டுமென்ருல் ''வேண்டாமை என்ற பண்

பைப் பெற்ருக வேண்டும். வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டு இல்லை. ஆண்டும் இல்லை; யாண்டும் இல்லை.

அவா இன்றி இருக்கும் நிலைக்குத்தான் "தூய்மைநிலை" என்று பெயரிட வேண்டும். புறந்தூய்மை நீரான் அமைய அகத்தூய்மை வாய்மையான் காணப் படுகிறது. வாய்மையை வேண்டுவோர்க்கு அனைத்தும் தூய்மையாகவே அமைந்து விடும். வாய்மையின் நல்ல பிற இல்லை. இதில் சந்தேகமே இல்லை. உத்தமர் காந்திமகானின் வாழ்வே சான்ருகும். சுவாமி விவேகானந்தர் தமது அறிவுரையாகக் கூறுவது: "Be True: Be Honest: Be Pure' இதனுல் விளங்குவது முதற்கண் வாய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதேயாகும். வாய்மையக் கடைபிடிக்கவே வேண்டும். அது ஒன்றினுல், அவா தன் வல்லமையை இழந்துவிடும். மற்ற நலன்கள் தாமா கவே ஓடிவந்து ஒட்டிக்கொள்ளும்.

அவா அற்ருேர்களை நிச்சயமாகப் பிறவியற்றவர்கள் என்றே கூறலாம். மற்றை யோரெல்லாம் அவாவினுல் கவ்வப் பட்டுத் துன்பங்கட்கே இலக்காவர். வஞ்சித்து நம்மை வீழ்த்த வல்லது அவா ஒன்றுதான். அதற்கு எஞ்ஞான்றும் அஞ்சி வாழ்வதே முறையாகும். அவாவை ஒருவன் முற்றிலும் கெடுக்க வல்லவனுயின், அவன் கெடாமைக்கு ஏதுவாய வினை கள் அனைத்துமே தாமே நெறியறிந்து உண்டாகும். அவா இல்லையாளுல் துக்கமே இல்லை; அஃது இருக்குமாயின் துன்ப மும், துக்கமும், தூக்கமின்மையும் மேலும், மேலும் முடிவு இன்றி இடைவிடாது வரத்தான் செய்யும், வளரத்தான் செய் யும்.

அவா என்பதற்குச் சரியான பொருள் என்ன தெரியுமா? அகராதியில் போய்த்தேட வேண்டாம். வள்ளுவரே பொருள் கூறுகிருர். அதுவே "துன்பத்துள் துன்பம் என்பதாகும்" இப் படி நமக்கு ஊறு விளைவிக்கும் அவா அறுத்தெரியப்படுமாயின் நமக்குண்டாகும் இன்பமானது இவ்வுலகத்தில் தொடங்கி, அவ்வுலகத்திற்கும் தொடர்ந்துவரும். இது உண்மை. வெறும் அலங்கார உரைகள் அல்ல.

ஒருக்காலும் நிரம்பா இயல்புடைய அவாவை ஒருவன் நீக்குவானாயின், அவன் இமயம்போல அசைவிலாத ஒரே நிலையை எஞ்ஞான்றும் பெற்று நிற்பான். "ஆசைக்கோர் அளவில்லை" என்ற முதுமொழியும் ஈண்டு நினைவுக்கு வருகிறது. "போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து" என்று மனம் சாந்திபெற அவாவானது தன்னியல்பில் நின்றே செத்து மடியும்.

அவா அறுத்தல் என்னும் இவ்வதிகாரம் ஒரு சக்தி மிக்கக் காந்தக்கல் என்னலாம். இதில் வந்து ஒட்டிக்கொள்ளும் இரும்பாம் குறள்களில் சில இதோ—

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" -341

"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்" -629

"வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில" -4

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" -350

அவாவை அறுப்போம்; பிறவித்தளையைத் தகர்ப்போம்;
பெரும்பயன் எய்துவோம்.

# காலந்தொறும் பழமொழி

பேராசிரியர் திரு, வ. பெருமாள் எம்.ஏ.பிடி. அவர்கள்
கோலார் தங்கவயல் (K.G.F.)
கருநாடக மாநிலம்

[மலர்–26 343ம்-பக்கத் தொடர்ச்சி]

இப்பாட்டில் இடம் பெற்றுள்ள முதுமொழி என்னுஞ் சொல் பழமொழியையும் குறிக்கும்.

கி. பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்தவர்கள் கடுவனிள வெயினனுர், நல்லெழுநியார் ஆகிய இரு புலவர்கள். இவர்கள் தாம் இயற்றிய பாடல்களில் 'முதுமொழி' என்னும் சொல்லை 'வேதம்' என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளனர்.

'பதினு யிரங்கை முதுமொழி முதல்வ'
— பரிபாடல்: 3: 42: கடுவனிள வெயினனுர்

'ஏவல் இன் முதுமொழி கூறும்'
— பரிபாடல்: 13: 40: நல்லெழுநியார்

பழமொழி வேதத்திற்கு நிகர், வேதம் பொய்த்தாலும் பழமொழி பொய்க்காது. இவ்விரு உண்மைகளையும் கருத்திற் கொண்ட புலவர்கள் 'முதுமொழி' என்னும் சொல்லை வேதம் என்னும் பொருளில் வழங்கியிருப்பது முற்றிலும் பொருத்தமாகும்.

கி. பி. இரண்டாவது நூற்றுண்டில் வாழ்ந்தவர் இளங்கோ அடிகள். அவர் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் பழமொழியை 'நெடு மொழி' என்றும், பல்லவையோர் சொல் என்றும் குறிப்பிடுகின்றுர். தந்தை ஏவலால் இராமன் காட்டிற்குச் சென்று மனைவி பிரிய வருந்தினுன் என்னும் பொருள்பட அமைந்த பழமொழியைச் சுட்டிக் காட்டி இது

அனைவரும் அறிந்தது; நாடு முழுவதும் பரவியுள்ளது' என்று கவுந்தியடிகள் கூற்றாகக் குறிப்பிடுகின்றார் இளங்கோ அடிகள்.

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேதமுதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ"

—சிலப்பதிகாரம்: மதுரைக்காண்டம்: ஊர்காண் காதை: 46–49

'பாவிக்கு அறமே யமன்' என்னும் கருத்துப்பட அமைந்த பழமொழியைக் கண்ணகி கூற்றாகக் குறிப்பிட்டு அதனைப் **பல்லவையோர்** சொல் (Popular Sayings) என்று சுட்டியுள்ளார், இளங்கோ அடிகள்.

'அல்லவை செய்தார்க்கு அறம்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே – பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉம் காண்"

— சிலப்பதிகாரம்: மதுரைக்காண்டம்: வழக்குரை காதை

'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்' என்பது இளங்கோ அடிகள் பயன்படுத்தியுள்ள பழமொழி.

இளங்கோஅடிகள் காலத்தில் வாழ்ந்தவர் கூலவாணிகன் சாத்தனார். இவர் அமைச்சர் சனமித்திரன் கூற்றாக நீண்ட அறவுரையைக் கூறி இறுதியில் அதனை 'முதுமொழி' என்று குறிப்பிடுகின்றார்.

'முதுமொழி கூற முதல்வன் கேட்டு'

— மணிமேகலை: 25:119

கி.பி. 5–வது நூற்றாண்டில் வாழ்ந்தவர் முன்றுறையரையனார் அவர் இயற்றியது பழமொழி நானூறு. இந்நூல் பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்தது. முன்றுறையரையனாரே தம் நூலுக்குப் பழமொழி நானூறு என்னும் பெயர் இட்டார் என்பதைப் பழமொழி நானூற்றுத் தற்சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாம். அவர் தம் காலத்தில் நாட்டில் பெரு வழக்கில் உள்ள பழமொழிகளில் நானூற்றைத் திரட்டி அவற்றுள் ஒவ்வொன்றையும் ஈற்றடியில் பயன்படுத்தி நானூறு வெண்பா இயற்றியுள்ளார்.

———

(தொடரும்)

# மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

107. திருநாரையூர் பண்: பழம் பஞ்சுரம்

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட
கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லான்
உமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கிஎய்த
அம்மான் அடியார்மேல்
நடலை வினைத்தொகை தீர்ந்துகந்தான்
இடம்நாரை யூர்தானே.

பொழிப்பு: கடலில் தோன்றிய கொடிய கசப்பான நஞ்சத்தை உண்ட கடவுளும், இடபத்தில் ஏறுபவனும், திருமேனியில் திருநீற்றைப் பூசவல்லவனும், உமையோடு ஒரு பாகம் கொண்டவனும் முப்புரத்தை அழிக்கும்போது வில்லை ஏந்தி அம்பெய்த அம்மானும், அடியாரிடமுள்ள துன்பம் தரும் வினைக் கூட்டத்தை நீக்கி மகிழ்ந்தவனும் ஆகிய சிவபெருமான் இருக்கும் இடம் திருநாரையூர் ஆகும்.

வெம்–கொடிய; கடு-கசப்பான; விடையேறி என்பது பெயர்; பொடி-திருநீறு; அடல்-அழித்தல்; நடலை-துன்பம்; வினைத்தொகை-வினையின் கூட்டம். தானே என்பது அசை இப்பதிகத்தைப் பாடுவார்க்கு அவலக்கடல் நீங்கும்.

108. திருஆலவாய் பண்: பழம் பஞ்சுரம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாயபரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே.

பொழிப்பு: தென் ஆலவாயிலில் தங்கியிருக்கும் எம்து முழு முதற்கடவுளே! உடம்பின் ஒரு பாதிபாகம் உமைப்

பெண்ணேடு ஆகிய பரமனே! இவ்வுலகம் முற்றும் சைவ நெறியால் நினது புகழே ஓங்க வேண்டும். எனவே, வேதத்தையும் அதிற்கூறியபடி செய்யும் வேள்விகளையும் பழித்துத் திரிகின்ற, அன்பில்லாதவராகிய சமணர்களோடு பௌத்தர்களை வாதிலே வென்று ஒடுக்கத் திருவுளச் சம்மதம் தானே?

வேதவேள்வியை-வேதத்தையும் வேள்வியையும்; உம்மைத்தொகை. நிந்தனை செய்து-பழித்து; உழலல்-திரிதல்; ஆதம்-அன்பு; அமண்-சமணர்; தேரர்-பௌத்தர். அழிக்க-ஒடுக்க பரமன்-மேலானவன்; ஞாலம்-உலகம்; ஆலவாய் என்பது மதுரை நகரில் உள்ள கோயிலின் பெயர். உறைதல்-தங்கி இருத்தல்; ஆதி-முதல்வன். சமணரொடு வாதிற்குச் செல்லும் முன் திருவாலவாய்க்குச் சென்று ஞானசம்பந்தர் இறைவனது சம்மதம் கேட்டு இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தை வல்லவர் பாக்கியவாளராவர்.

———

(தொடரும்)

உ

சிவ சிவ

**சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி**
**அவாயம் அறவே அடிமைய தாக்கிச்**
**சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை**
**அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.**

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

| | | ரூ | பை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ... | 0 | 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 | 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, ... | 0 | 40 |
| 5 | ,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ... | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக்கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ... | 0 | 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 | 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 | 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 | 50 |
| 12 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்-மூலம் ... | 0 | 15 |
| 13 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 | 10 |
| 14 | கந்தர் கலிவெண்பா (புதிய பதிப்பு) ... | 0 | 05 |
| 15 | அபிராமியந்தாதி மூலம் ... | 0 | 15 |
| 16 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 5 | 25 |
| 17 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 3 | 75 |
| 18 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 2 | 75 |
| 19 | திருவாசகம் மூலம் (புதியபதிப்பு) ... | 1 | 65 |
| 20 | திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ... | 4 | 50 |
| 21 | 9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ... | 0 | 56 |
| 22 | ,, ,, தெளிவுரை ... | 3 | 25 |
| 23 | பெரிய புராணம் (மூலம்) புதிய பதிப்பு ... | 6 | 75 |
| 24 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 25 | பேராயிரப் பனுவல்கள் ... | 0 | 10 |
| 26 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 | 40 |
| 27 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 28 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 | 50 |
| 29 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 30 | பழமொழித் திருமுறை ... | 0 | 25 |
| 31 | அப்பர் விழா வெளியீடு ... | 0 | 25 |
| 32 | Hymns and Proverbs ... | 0 | 30 |
| 3 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 | 10 |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.



| | | | |
|---|---|---|---|
| 34 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் | ... 0 | 30 |
| 35 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) | ... 1 | 75 |
| 36 | திருவாசகம் தேனும் கனியும் | ... 0 | 15 |
| 37 | தேவாரம் பாடும்பயன் | ... 0 | 15 |
| 38 | காசிக்கலம்பகம் உரை நடை | ... 0 | 15 |
| 39 | தாழைத் திருமுறை | ... 0 | 15 |
| 40 | ஐந்து நீதி நூல்கள் | ... 0 | 10 |
| 41 | நவக்கிரகமாண்பு | ... 0 | 25 |
| 42 | ஸ்ரீ சைலம் | ... 0 | 10 |
| 43 | திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் | ... 0 | 37 |
| 44 | செந்திலாண்டவன் மகிமை | ... 0 | 15 |
| 45 | திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) | ... 2 | 00 |
| 46 | திருமுருகாற்றுப்படை | ... 0 | 15 |
| 47 | தேவார வைப்புத்தல விளக்கம் | ... 0 | 15 |
| 48 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) | ... 2 | 00 |
| 49 | திருக்குறள் (மூலம்) | ... 0 | 25 |
| 50 | திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை | ... 0 | 20 |
| 51 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) | ... 0 | 60 |
| 52 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் | ... 1 | 50 |
| 53 | திருக்குறள்-பொருட்பால் | ... 2 | 50 |
| 54 | திருக்குறள்-காமத்துப்பால் ஷ 53, 54, 55, திருக்குறள் 2 புத்தகமும் | ... 4 | 00 |
| 55 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் | ... 1 | 25 |
| 56 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | ... 1 | 00 |
| 57 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் | ... 3 | 00 |
| 58 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) | ... 0 | 50 |
| 59 | மங்கலம் | ... 0 | 20 |
| 60 | திருஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் | ... 0 | 20 |
| 61 | கோதனத் திருமுறை | ... 0 | 16 |
| 62 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் | ... 0 | 15 |
| 63 | பண்டார மும்மணிக்கோவை உரை நடை | ... 0 | 15 |
| 64 | மகேசுவரபூசை | ... 0 | 15 |
| 65 | திருமந்திரம் (அச்சில்) | | |
| 66 | திருவிசைப்பா தேனும் கனியும் | ... 0 | 10 |

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்,
2. "தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோவில்தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி. சென்னை-600005

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 628601